தென்மொழி

தனித்தமிழ் இலக்கியத் திங்களிதழ்





சுவடி : 10 ஓலை : 11-12

12 JUL 1973

விலை 75 காசு



நமக்கு வந்த மடல்கள்.

0: 367: வழிகாட்டும் அரிமாவே! வணங்குதும் தமிழால்!! தென்மொழி இதழ், சுவடி-10; ஓலை-9 கிடைத்திடப் பெற்றோம்! அதில் மக்களவைப் பகுதியில் வெளியிடப் பெற்றுள்ள பாசறைப் பெயரிட்ட மடலைக் கண்டு மிக வருந்துகின்றோம். மடலின் கீழ் வெளியிடப் பெற்றுள்ள குறிப்பு வருத்தத்திடையும் ஆறுதல் தருகின்றது! நம் பாசறையில் தங்களைப் போன்றவர்களை இம் முறையில் இழித்துரை செய்யும் கடை நிலைக்கும் அடுத்த கீழ்நிலை மாந்தர் எவருமிலர். இற்றைக்கும் பாசறை தென்மொழிப் புரப்பகமாக-பாவாணர் வழிச் செல்லும் தன்மைத்தாக உளதேயன்றி எட்டுணையும் மாறிடவில்லை. எனவே எவரோ முகவரியில்லாதவர் எழுதிய மடலைப் பொருட்படுத்த வேண்டாமென இறைஞ்சுகிறோம். காலச் சூழலால் இக்கால் தடைகள் சில தோன்றினும் தனித்தமிழியக்கம் தண்ணீர்ப் பெரும்பெருக்கே போல தடைகளைத் தகர்த்துப் பெருநடை யிடுவதுறுதி!

சி. நாச்சியப்பன் (தலைவர்க்காக)
இரா. ப. அருளரசு (பொருளர்)
தமிழியக்கப் பாசறை-தலைமையகம்-காரைக்குடி-3.

(ஆசிரியர் குறிப்பு: இம்மடலைத் தொடர்ந்து, தென்மொழி மக்களவை 173-ஆம் மடலுக்கு மறுப்பாகவும், அம்மடலைக் கண்டித்தும் நமக்குப் பல மடல்கள் வந்துள்ளன. அவையனைத்தும் தென்மொழி மேல் அன்பர்கள் கொண்ட அக்கறையையும், பேரன்பையும் காட்டுவதாக உள்ளன. இடமின்மையால் அவற்றை வெளியிட இயலவில்லை. மடல்களிற் சிலவற்றை எழுதியவர்கள் 1 க. திருவாசகம் (எம். காம்) கலைக்கல்லூரி, அழகப்பர் தமிழ் மன்றம், காரைக்குடி-3; 2 இரா. பாவாணன் முன்னாள் தமிழியக்கப் பாசறைச் செயலர்; 3 திருமாவளவன் (தமிழியக்கப் பாசறை) 4 இரா. ப. அருளரசு காரைக்குடி-3; 5 ஆ. தமிழரசன் தலைவர் தமிழியக்கப் பாசறை; 6 செ. கூத்தையா. அறி. இ. மேனாட்பாசறைப் பொருளர்; 7 புலவர். சாத்தனூர்க்கிழான்., சாத்தனூர் 8 இரா. சண்முகம் சாத்தனூர் (வ.ஆ.) 9 க. தமிழமல்லன். புதுவை-9. 10 மு.ச. அழகேசன் சென்னை-24 11 ப. மூர்த்தி வெங்காளூர் 8. 12 இரா. பரணன், பரணம்; 13 ந. வை. இளஞ்செழியன். அம்மையன்பட்டி (தஞ்சை), 14 ந. தேவராசன். வேலூர் வ. ஆ 15 சிற்றம்பலம், மதுரை-1. 16 பழ. மணிவண்ணன். உரத்தநாடு-புதூர். முதலியோர்.)

0: 368: "ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்" என்ற தலைப்பில் அரிய பல கருத்துகள் தொகுத்துத் தரப்படுகின்றன. இனப்பற்று இன்றியமையாதது என்பதை மறந்து விட்டிருக்கிற தமிழர்களின்—உடன் பிறப்புகளின்-அறிவுக் கண்களைத் திறக்க இவை பெருந்துணை செய்யும் என்பது உறுதி. தொடரட்டும் இந்த அரிய பணி. "உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசும்" வழக்கம் தமிழர்களிடம் இல்லை என்பதை அந்த உலுத்தர் கூட்டம் உணர்ந்து கொள்ள இதனைவிடச் சிறந்தவழி இருப்பதாக எனக்கும் புலப்படவில்லை. தங்களுடைய தொண்டு அரிய தொண்டு என்பதைத் தமிழகம் உணர்ந்து கொண்டு வருகிறது!! உ.த.க. கருத்தரங்கு

[தொடர்ச்சி 3-ஆம் அட்டைப்பக்கம் பார்க்க]

மதுரையில் விடுதலை ஊர்வலம்!

சென்று கொண்டிருந்தது, விடுதலை மாப்படை!
செவ்வரி படர்ந்தது நெடுங்கூர் விழிகளில்;
தின்று கொண்டிருந்தனர் பகையினை, வாயினுள்;
தினவுநீர் ஊறித் தெறித்தது பேச்சிலே!
என்றுகண் டிருக்குமப் பாண்டியன் மாநகர்?
எதிர்ந்தவர் யாவரும் யாவரும் வியந்தனர்!
நின்றுகொண் டிருந்தனர் பகைவர்கள் எதிர்ப்புற;
நெட்டுயிர்ப் பெய்தினர் நீடுற நடுங்கியே!

'தமிழ்நிலம் தமிழருக் கே'-என முழங்கினர்!
'தாய்நிலம் விடுதலை பெறு' கெனப் பிளிறினர்!
'தமிழ்மொழி அரியணை யாள்'கென வீறினர்!
'தாழ்வுகள் அகல்'கெனத் தருக்கொடு கூறினர்!
'இமிழ்கடல் வரைப்பினில் யாங்கணும் உறைந்திடும்
எந்தமிழ்த் தாயினர் யாவரும் இணை'கெனத்
துமிபட முழக்கியே தொன்னகர் மதுரையின்
தோரண வீதியில் ஊர்வலஞ் சென்றனர்!

சென்றுகொண் டிருந்தவல் லூர்திகள் நின்றன!
செருப்படை போல்வலஞ் சென்றவர் கண்டதும்
ஒன்றிரண் டொன்பது பத்தென நூறென
ஓரா யிரம்நடை பாதையர் ஒதுங்கியே
நின்றுகொண் டவர்சொலும் நெருப்புரை கேட்டனர்!
நெரிசல்கண் டோடிய பேர் பலர்!மற்றவர்
நின்றுகொண் டிருந்தவர் இருந்தவர்-தாம்! பிற
நினைவுகள் மறந்தவர் மறந்தவர்-தாமரோ!

காவலர் ஒருபுறம் கையற நடந்தனர்;
காளையர் நிரல்படக் கொடியோடு கடுகினர்!
மேவுறு கன்னியர் சிறுவர்கள் ஒருபுறம்
மெல்லிய செந்நிற மார்பணி பூண்டராய்
ஆவலின் கொள்கைகள் அழகுற முழக்கினர்!
அயில்விழித் தாயினர் அவர்வழித் தொடர்ந்தனர்!
கூவலோ பகைவரின் குலைகளை உலுக்கின!
கொள்கைகள் அவர்செவிக் குறும்பறை யறுத்தன!

குன்றுகண் டஞ்சிடுந் தோளினர் எம்மவர்!
கூற்றினை நூறிடுங் கொல்களி றன்னவர்!
'வென்றுகொண்டவர்தலை வெட்டிவா'-என்றிடில்
வீணரைக் கட்டிவந் தளித்திடும் வேங்கையர்!
மென்றுகொண் டிருந்தவெம் படையினர் தோள்களில்
மேல்விழுந் தாடியே களித்தது வீரமே!
அன்றுகண் டாரியப் படைகடந் தவனினும்
அழல்தெறி மறவரைக் கண்டது மதுரையே!

''செஞ்சுவதில்லை பிறர்பால்! அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும் நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை'' எனவே தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதிலலை உலகில் எவரும் எதிர்நின்றே!

சுவடி 10 ஓலை 11-12 [நிறுவனம் தி. பி. 1990 (1959)]
மீனம்-விடை தி. பி. உ௰௪ (ஏப்-சூன்-,1973)
பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1 தமிழகம்.

0 தமிழகப் பிரிவினை மாநாடு!

பாண்டியன் தலைநகராம் மதுரையில்!

0 விடுதலை மறவன் வீரபாண்டியக் கட்டபொம்மன் சிலையிலிருந்து ஊர்வலம்!

0 விடுதலை முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன!

0 மதுரைத் தெருக்கள் அதிர முழங்கின!

0 மக்கள் வியப்பெய்தினர்; விழிப் பெய்தினர்!

0 இடையில் ஊர்வலம் தடைப்படுத்தப் பெற்றது!

0 காவலர்கள் சுற்றிவளைத்தனர்! தடையிட்டனர்! களிற்றுப் பிளிறலுடன் மறவர்கள் தடைமீறவே தளைப்படுத்தினர்!

0 ஐந்து காவல் வண்டிகள் அலறப் பறந்து ஊர்வலத் தினரைக் காவல் நிலையத்திற்குக் கொண்டு சேர்த்தன!

0 பிற்பகல் மாநாடு காவல் கட்டுப்பாட்டு நிலையத் திற்குள் நடந்தது!

0 தமிழகம் விடுதலை பெறச் சூளுரைத்தனர் மறவர்கள்!

0 மாலையில் விடுவிப்பு! மறுநாள் மாநாட்டுத் தடைமீறல்!

0 மீண்டும் பதினொரு பேர் நான்கு நாள் காவற்பட்டனர்!

0 தாய்த்தமிழகம் விடுதலை நோக்கி அமைத்த இரண்டாம் பாசறை வரலாறு இது!

0 விடுதலை வரலாற்றில் வீரமறவரின் முதற்பட்டியல்!

0 துடித்துக் கிடக்கும் தோள்மறவர்கள் அடுத்த முற்றுகைக்கு அங்காந்து கிடக்கின்றனர்!

0 பகைவர்கள் அஞ்சுகின்றனர்! ஆட்சியினர் பரபரப் படைகின்றனர்!!

0 ஓடியுமா பகையெலும்பு? முடியுமா அடிமை நிலை? விடியுமா தமிழகம்? படியுமா உரிமை ஒளி?
-எதிர்காலமே விடை சொல்!

தென்மொழிக் கொள்கை (தமிழகப் பிரிவினை) 2-ஆவது மாநாடு மதுரை.

(நிகழ்ச்சிச் சுருக்கம்)

மதுரையில் கடந்த சிலை 10, (24—12—72) அன்று இரவு 2-மணியளவில், வலம்புரி இல்லத்தில், மாநாட்டு அமைப்பாளர் திரு. பெருஞ்சித்திரனார் தலைமையில் அமைக்கப்பெற்ற செயற்குழு முடிவின் படி, தென்மொழிக் கொள்கை (தமிழகப் பிரிவினை) 2-ஆவது மாநாடு, மதுரையில் தி. பி. 2004, விடை 27, 28 (9, 10 சூன் 73) காரி, ஞாயிறு இரீகல் திரையரங்கில் நடைபெறுவதென உறுதி செய்யப் பெற்றது. அதன்படி, திரு. க. வெ. நெடுஞ்சேரலாதன் (ஆசிரியர், 'தீச்சுடர்') மாநாட்டு வரவேற்புக் குழுத்தலைவராகவும், திரு. உ. அரசுமணி செயலராகவும், திரு. சு. ம. முருகுவேந்தன் துணைச் செயலராகவும், திரு. கா. தென்னவன் பொருளராகவும், திருவாளர்கள், கி. மாவேந்தன், அ. தமிழன்பன், ப. முருகவேள், ஓடை.தமிழ்ச்செல்வன், பெ. திருவேங்கடம் ஆகியோர் செயற்குழு உறுப்பினராகவும் தேர்ந்தெடுக்கப்பெற்றனர்.

செயற்குழு திட்டமிட்டுக் குறித்த நாள்களில் மாநாடு நடைபெறவும், ஊர்வலம் முதலியன சிறப்புற நடக்கவும் ஏற்பாடுகள் செய்து வந்தது. மாநாட்டு வரவுக்காக, அறிக்கைகளும், பற்றுமுறிகளும் அச்சிடப் பெற்று, தமிழகம் முழுவதும் ஆங்காங்குள்ள விடுதலை இயக்க அமைப்பாளர்களுக்கும், உறுப்பினர்களுக்கும் அவற்றை அனுப்பிவைத்து, மாநாட்டுச் செய்தியைப் பரப்பவும், நன்கொடைகள் தண்டவும் ஏற்பாடுகள் செய்யப் பெற்றன. மாநாட்டுப் பொறுப்பாளர்களில் திரு. க. வெ. நெடுஞ்சேரலாதனும், திரு. அரசுமணியும் திரு. சு. ம. முருகுவேந்தனும், திரு. கா. தென்னவனும், திரு. ப. முருகவேளும், திரு. ஓடை தமிழ்ச்செல்வனும் அடிக்கடி கூடி, மாநாட்டுப் பணிகள் திட்டமிட்டவாறு நடைபெற உழைத்து வந்தனர். திரு. க. வெ. நெடுஞ்சேரலாதனும், திரு. அரசு மணியும் இரவு பகல் பாராது செயலாற்றி வந்தது குறிப்பிடத் தக்கது.

அறிக்கைகள் பலவாறு விளக்கமாகவும் சுருக்கமாகவும் அச்சிடப் பெற்றுப் பரப்பப் பெற்றன. ஆங்கில அறிக்கையும் அச்சிடப் பெற்று, நடுவணரசு அமைச்சர்கள் சிலர்க்கும், ஆங்கிலச் செய்தி

யிதழ்களுக்கும் அனுப்பி வைக்கப்பெற்றது. மாநாட்டுச் செய்திகள் தென்மொழி, தமிழ், தீச்சுடர், வலம்புரி ஆகிய கொள்கை யிதழ்கள் வாயிலாகவும் பரப்பப் பெற்றன. இருப்பினும் மாநாட்டுத் தொடர்பாகச் சுவரொட்டிகள் ஏதும் அடிக்கப் பெற்று முன்கூட்டியே விடுக்கப் பெறாதது பெருங்குறையாகவிருந்தது. போதுமான பொருள் வலிவு இருந்திருந்தால் செய்திகளை இன்னும் முன் கூட்டியும் விரிவாயும் பரப்பியிருக்க முடியும் என்று செயற்குழு குறைபட்டுக் கொண்டது. ஆனால் இருப்பதை வைத்துக் கொண்டுதானே செயலாற்ற முடியும். மாவட்ட அளவில் ஒதுக்கப்பெற்ற குறியீட்டுத் தொகை சரிவரத் தண்டப் பெறவில்லை. பெகும்பகல்லா இளமாறன் நெய்வேலியன்பர்கள், கோவை நித்தலின்பன், போலும் பெய்யன்பர்கள் தம் பொறுப்பில் அளிதத தொகைகளுடன், மாநாட்டுச் செயற்குழு மதுரையளவில் தாமே புரட்டிக் கொண்ட தொகைகள்தாம் மாநாட்டு அடிப்படைச் செலவுகளைச் செய்யவுதவின. எத்தனையோ இன்றியமையாச் செலவுகளுக்காக வரவேற்புக் குழுத் தலைவரும், செயலரும் தம் தம உடைமைகளைக் கூட அடகுக் கடைகளில் வைக்க வேண்டியிருந்தது. மாநாடு தொடங்கினால் பட்டினிகிடந்தாகிலும் பணம் தண்டுவோம்; 'மடியேந்தியாகிலும் படியளப்போம்' —என்றவர்களெல்லாரும் வாயினால் அளந்தார்களே தவிர மாநாட்டுக் கடைசிநாள் வரைக் கையினால் அளக்கவில்லை. தமிழனுக்கு இவ் வகையில் என்றைக்குத்தான் சுறுசுறுப்பும் நம்பிக்கையும் வருமோ, தெரியவில்லை. பொருள் வலிவும், குழுவலிவும் இல்லெனில் எவ்வளவு சிறந்த திட்டங்களும் இடைமுறிந்து விடும் என்பதை இத்துறையில் ஈடுபட்ட எல்லாருக்கும் கூறிக் கொள்ள விரும்புகின்றோம். இவ் விடத்தில் இன்னொன்றையும் கூற வேண்டியுள்ளது.

நம்மில் ஒவ்வொருவரும் ஏதோ ஒரு வகையில் நமக்குள் நாமே வேறுபட்டுக் கிடக்கின்றோம். நாம் செய்வதில் 'இது சொத்தை; அது சொள்ளை' என்று கூறிக்கொண்டு வேறு பிரிந்து போவாரை இன்னும் காண்கிறோம். 'சொத்தையும் சொள்ளையும்' இல்லாத ஒருவராக அவரேனும் இருப்பதில்லை. தம் முதுகுப்பட்டையை மூடி மறைத்துக் கொண்டு, நம் முகத்துத் தேமலைப் படையென்று பிதற்றித் திரிபவரையும் பின்பற்றுதற்குப் பத்துப்பேர் இருக்கத் தான் இருப்பார்கள். நம்மவர்களில் இன்னும் சிலர் உண்டு. அவர்கள்

நம் வினைத்திட்டங்கள் அனைத்தும் சரியில்லையென்று கூறிக் கொண்டே நம்முடன் உணவுக் கடை முதல் சிறைக் கூடம் வரை ஒட்டி வந்து கொண்டிருக்கின்றார்கள். இன்னும் சிலர் இப்படியும் இல்லாமல் அப்படியும் இல்லாமல் நடுவில் ஊசலாடிக் கொண்டிருக்கின்றதை மிகுவாகப் பார்க்கலாம். அவர்கள் இருதரப்பினரையும் ஏமாற்றிக் கொண்டு, அல்லது இரண்டு புறத்தினரிடையும் நன்மைகளைப் பெற்றுக் கொண்டு, இலக்கு எண்ணிக்கையாக வந்து நிற்பவர்கள். அவர்களே வினைக்கு வேறுமுகம் காட்டுபவர்கள். இவர்களிடத்திலெல்லாம் உண்மையான விடுதலைத் தொண்டர்கள் எச்சரிக்கையாகவே இருக்க வேண்டும். இனி, இவர்கள் தவிர வேறு வகையான ஒரு சிலரும் இருப்பதாகத் தெரிய வருகிறது. 'இன்னான் தொடங்கினான் இதை; நாம இதற்கேன் துணைபோக வேண்டும்; ஏதையாகிலும் சொல்லித் தட்டிக் கழித்து விட்டால் போகிறது'—என்று அவ்வகையினர் எண்ணுவதாகவும் தெரிகிறது. அத்தகையினர்க்கும அவரைச் சார்ந்து போவார்க்கும் பணிவாக ஒன்று சொல்லிக கொள்ள விரும்புகின்றோம்.

"பொதுத் தொண்டு என்பது இயல்பாக நாம் காற்றை உள்ளுக்கிழுத்து விட்டுக் கொண்டிருக்கின்றோமே, அதைப் போன்றதன்று; மூச்சைப் பிடித்துக் கொண்டு, நம் வழியில் கிடக்கும் பாறையை முதுகைக் கொடுத்து முட்டித்தள்ளுவதைப் போன்றது. நாம் இயல்பாக மூச்சை இழுத்து விடுவதைப் போல அதையும் செய்ய முடியாது. எவரேனும் முதலில் முன்னுக்கு வந்து மூச்சைப் பிடித்து நம் முன்னேற்ற வழியை யடைத்துக் கிடக்கும் தடைக்கல்லை முட்டுக் கொடுத்து, அப்புறத் தள்ளியே யாகல்வேண்டும். அதற்கு நீங்களும் முன் போகலாம். நாங்களும முன் போகலாம். எவர் முன்னே போக வேண்டும் என்பது கட்டளையன்று. துணிவுள்ளவன, பொதுவுணர்வை அடக்க முடியாமல் வைத்துத் திணறிக் கொண்டுள்ளவன எவனாகிலும முன்னே போக வேண்டியதுதானே! அவன் எவனாயிருந்தால் என்ன? ஊரறிந்த ஒருவன்தான் அதற்கு முன் வர வேண்டும் என்பதில்லை. வீடு தீப்பற்றிக் கொண்டால் முதன்முதல் எங்கள் ஊர்த் தலைவர் தண்ணீர்க்குடத்தைத் தூக்கட்டும்; அல்லது சொல்லட்டும்; அதன் பின்தான் நாங்களும தண்ணீரைத் தூக்குவோம்; அணைப்போம்" என்று எவனும் சொல்வதில்லை. வீடு தீப்பற்றிக் கொண்ட ஒரு நிலையை எப்படி ஒரு காலத்தால், துணி

வுடன், முன்னேறிச் செய்ய வேண்டுமோ, அப்படியே ஒரு நாடு அடிமைத் தீப்பற்றிக் கொண்ட பொழுது, உரிமை நீரை அதன்மீது வாரி இறைப்பதில், குறிப்பிட்ட எவரையும் எதிர்பார்த்துக் கிடக்கத் தேவையில்லை. உலகில் ஒவ்வொரு செயலுக்கும் ஒவ்வொருவர் ஒவ்வொரு வகையான நயன்மையை(நியாயத்தை)க் கற்பிக்கலாம். அவரவர் சொல்லுவதையும் சிற்சிலர் பின்பற்றவே செய்வர். எனவே ஒவ்வொரு காலத்துக்கும் ஒவ்வொருவராக எல்லாரையும் பின்பற்றிக் கொண்டு செல்ல வேண்டுமென்பதில்லை. எவரைப் பின் பற்றுவது என்பது நமக்குத் தெளிவாகத் தெரிவதானால், நாம் எல்லாரையும்விட அறிவுள்ளவராக இருத்தல் வேண்டும். இப்படித்தான் ஒவ்வொருவரும் தம்மை மிகையாகக் கருதிக் கொண்டும் கற்பனை செய்து கொண்டும் நடைமுறை நிகழ்ச்சிகளுக்கு ஊறுகள் செய்து வருகின்றனர்.

பின்பற்றப்படுவர் எவர் என்பதைக் கால நீட்சியும், வினை விளைவும், அறிவுக் கூர்மையுமே காட்டும். இவற்றில் கால நீட்சி என்பது, ஒருவன் கொள்கை எத்தனை நெடுங்காலம் தடம் புரளாமல் உள்ளது என்பது. வினை விளைவு என்பது அக்கொள்கை தொடக்கத்தில் உள்ளதைவிட அவன் முயற்சியால் எவ்வளவு விளைந்துள்ளது என்பது. அறிவுக் கூர்மை என்பது அவன் அறிவால் செய்த செயல்கள், உரைகள், வெளியீடுகள் எவ்வளவு என்பது. இம் மூன்று வகையாகவும் கணித்துப் பின்பற்றப் படவேண்டியவர் ஒருவரைத் தேர்ந்தெடுத்து, அவர் கொண்ட கொள்கையைத் தம்முடையாக்கிக் கொண்டு, அவர்மேல் நம்பிக்கை வைத்து, உறுதியுடன் அவர் காட்டும் பாதையில் முன்னேறிப் போக வேண்டுமே தவிர, ஒன்றைப் பற்றுவதும் சறுக்குவதுமாகவே இருந்தால் எந்த விளைவையும் எதிர்பார்க்கவே முடியாது. இவற்றையெல்லாம் இங்கு ஏன் குறிப்பிடுகிறேமெனில், கடந்த மாநாட்டின் பொழுது சில கூழாங்கற்கள் வைர ஒளி காட்டி, அங்குக் கூடிய அன்பர்களின் மனங்களைக் குழப்பியடித்துக் கொள்கைக் கூறு போட்டதை நேரிலேயே காணவும் கேட்கவும் நேர்ந்தது. பொதுவாக இன்ன பிற குழப்பக்காரர்களாலேயே நம் கொள்கைக்கும் முடக்கம் ஏற்படுகின்றதை நம்மைப் போல் அன்பர்கள் சிலரும் கண்டு வருந்தி நம் கவனத்திற்குக் கொண்டு வந்தனர். ஆக்கி வைத்த சோற்றுக்குப் பங்குக்கு வந்து படையல் போட்டுக் கொண்டு பழுதுகூறும் அவர்களைக் காலந்தான் காட்டிக் கொடுக்க வேண்டும். மற்றப்படி அவர்களை முகங்காட்டுவதும் முறியடிப்பதும் நம வேலையன்று.

மேற்குறிப்பிட்ட இடையூறுகள் நம் இயக்கத்தில் மட்டுந்தாம் இருப்பதாக எவரும் கருதிக் கொள்ளக் கூடாது. பத்துப்பேர் சேர்ந்து செய்யும் எந்தப் பணியோ, தொண்டோ, விழாவோ, கட்சியோ, கழகமோ எதுவாக விருந்தாலும் இவ்வத்தனை எதிர்நிலைகளும் எழவே செய்யும். இந்நிலை இயற்கையின் தேர்வுநிலைக் கொள்கையை அடியொட்டியது. இத்தனை எதிர்ப்புகளுக்கும் இடையில் எவன் துணிந்து, சலிப்புறுமல், சோர்வுறுமல் தன் வினையைச் செய்கின்றனே அவனே அதற்குத் தகுதியானவன் என்பதை மக்கள் கண்டுகொண்டு, அவனைப் பின் பற்றித் தாங்களும் முன்னேறிக் கொள்ள வேண்டுமென்பது இயற்கை வகுத்த சட்டம். எனவேதான் இந் நிலைகளுக்கெல்லாம் நாம் என்றும் மனஞ்சலித்ததில்லை. இனி, இன்னும் இதில் விளங்கிக்கொள்ள வேண்டிய உண்மைகளும் பலவுள. அவை மெய்யறிவுக்குட் பட்டவையாதலால் இங்குக் காட்டப்பெற வேண்டியதில்லை.

இனி, மதுரை விடுதலை மாநாட்டுச் செயற்குழுவின் திட்டப்படி எல்லா வினைப்பாடுகளும் முன் பின்னுகவோ, ஒன்றுக்குத்தலாகவோ படிப்படியாகச் செய்யப் பெற்று வந்தன. அன்பர்கள் நெடுஞ்சேரலாதனும், அரசுமணியும் முனைந்து ஈடுபட்டிலரேல் மாநாடு நடைபெற்றிருக்குமா என்பது ஐயமே! எப்படியோ மாநாடு குறிப்பிட்ட நாளில் நடைபெறுவதை, இடையில் எத்தனையோ இடர்ப்பாடுகள் குறுக்கிட்டும், தள்ளிப்போட முடியாமற் போய்விட்டது.

மாநாட்டுக்கு ஒரு கிழமைக்கு முந்தியே அமைப்பாளர் பெருஞ்சித்திரனுர் மதுரைக்குப் போய் பாசறை யமைத்துக் கொண்டு, எல்லாச் செயல்களையும் நேரில் நின்று கண்காணித்துக் கொண்டிருந்தார். மாநாட்டுக்கு முந்தின நாளே வெளியூர் அன்பர்கள் பலர் வரத் தொடங்கி விட்டனர். நம் மாநாட்டு அலுவலகத்தைத் தேடிப்பிடிப்பது தான் பலருக்குத் தலைச்சுற்றலாகப் போய் விட்டது. மாநாட்டு அலுவலகத்தை, ஏனோ தெரியவில்லை, நம் செயற்குழு ஒரு சந்தில் கொண்டு போய் அமைத்திருந்தது. ஆனுலும் வெளியூரிலிருந்து வந்த அன்பர்கள் பலரும் மனஞ்சலியாமல் ஆங்காங்கு அவரவர்களின் ஏந்துகளுக்குத் தக்கபடி, பல்வேறிடங்களிலும் தங்கிக் கொண்டனர். 8-ஆம் பக்கல் வெள்ளியிரவே மாநாட்டுக் கூட்டம் கல கலக்கத் தொடங்கி விட்டது. மதுரை நகரெங்கும் சுவரொட்டிகள் ஒட்டப் பெற்றிருந்தன. மாநாட்டில் பெரியார் கலந்து கொள்வதாக விருந்த படியால், அறிவிப்புகளில் அவர் பெயர் கொட்டை யெழுத்துகளில் போடப் பெற்றிருந்தன. மாநாட்டு நாளன்று மதுரை பல்வகைச் சிறப்புகளையும் எதிர் நோக்கிக் காத்திருந்தது. முதலமைச்சர்

கலைஞர் அருட் செல்வர் அன்றைய நாள் ஒரு திருமணத்திற்கெனவும், வேறு சிறப்புக் கூட்டம் ஒன்றிற் கலந்து கொள்ளவும் வந்திருந்தார். பெரியாருக்கு நம் மாநாட்டு நிகழ்ச்சியோடு வேறு ஒரு பொதுக் கூட்டமும், அருப்புக்கோட்டையில் ஒரு திருமணக் கூட்டமும் இருந்தன. அ. தி. மு. க. தலைவர் எம். சி. இரா. வேறு ஒரு நிகழ்ச்சிக்காக மதுரை வழியாக அன்று போக வேண்டியிருந்தார், அவர் அன்றைய நாள் மதுரையில் தங்குவதென ஏற்பாடு செய்யப்பெற்றிருந்தது. இம் மூவகை நிகழ்ச்சிகளுக்காகவும் காவலர்கள் மாநாட்டுக்கு முந்தின நாளிலிருந்தே பல முடுக்கமான பணிகளை யமர்த்திக் கொண்டு, சுறு சுறுப்பாக இயங்கத் தொடங்கினர். இந் நிலையில் நம் மாநாட்டு ஊர்வலத்துக்கு எங்கு இசைவு கிடைக்காமற் போய்விடுமோ என ஐயுற்றிருந்தோம். நல்லவேளை வரவேற்புக்குழுத் தலைவர், செயலாளர் போலவே இங்கும் அங்கும் ஓடி, இவரையும் அவரையும் பார்த்து, ஊர்வலத்திற்கும் மாநாட்டிற்கும் இசைவுகளை வாங்கியே விட்டார்.

மாநாட்டுக்கு முந்தின நாள் இரவு தட்டிகள், பதாகைகள், தூக்குத் தட்டிகள் முதலியனவற்றை எழுதுவதிலும் ஆங்காங்குக் கொண்டு போய் வைப்பதிலும், கட்டுவதிலும் அன்பர்கள் பலரும் முடுக்கமாக ஈடுபட்டிருந்தனர். புலவர், திரு. இறைக்குருவனார் தம் ஆசிரியப் பணிகளுக்கிடையில், மாநாட்டு வினைப்பாடுகள் சிலவற்றில் தாமே ஈடுபடுவதிலும் கருத்தறிவிப்பதிலும் முனைந்திருந்தார். வெங்காளூரிலிருந்து நாடகக் குழு வந்து இறங்கியிருந்தது. கொடிகளும் மார்பொட்டிகளும் ஊர்வலத்திற்கென அணியமாகிக் கொண்டிருந்தன.

வெள்ளி (8—6—73) இரவு 8 மணிக்கு முன்பே அறிவித்தபடி, மேலமாசி வீதியிலுள்ள 'அப்சரா' விடுதியின் 1-ஆம் எண் அறையில் 'தென்மொழியன்பர்' கூட்டம் நடந்தது. கூட்டத்திற்கு ஏறத்தாழ முப்பதுபேர் வந்திருந்தனர். அக்கால், இரண்டு மாதங்களுக்கு ஒரு முறையும் மூன்று மாதங்களுக்கு ஒன்றுகவும் தட்டுத்தடுமாறி வெளி வந்து கொண்டிருக்கும் தென்மொழியின் இப்பொழுதைய நிலை, அதற்குள்ள கடன் சுமைகள், அது தொடர்ந்து வந்தாக வேண்டிய தேவை முதலியவை பற்றியெல்லாம் அன்பர்கள் முன்னிலையில் ஆசிரியர் திரு. பெருஞ்சித்திரனாரும், தென்மொழி அமைச்சர் திரு. அன்பழகனும் எடுத்து விளக்கினார்கள். இடையிடை திரு. இறைக்குருவனாரும் நிலைகளை விளக்கினார்; அதன்பின், தென்மொழி அடுத்து வரவிருக்கின்ற புதிய அமைப்புப்பற்றி அன்பர்கள் கருத்தறிவிக்கக் கேட்டுக்கொள்ளப் பெற்றனர். விளம்பரங்கள் ஏற்பது பற்றியும், அட்டைப்படம் பற்றியும், உள்ளே வெளியிட வேண்டிய

செய்திகள் பற்றியும் கருத்துரைகள் பரிமாறிக் கொள்ளப் பெற்றன. இறுதியில் 'எவ்வாறேனும் சிறப்பாகவும், இடையீடின்றியும் கொண்டு வர எல்லா முயற்சிகளையும் செய்ய வேண்டுமென்றும், தனித்தமிழிலோ தனி ஆங்கிலத்திலோ தரும் விளம்பரங்களை மட்டும் ஏற்றுக் கொள்ள லாம் என்றும், பொது மக்களும் விரும்பிப் படிக்கும் படியான செய் திகளைத் தரவேண்டும் என்றும் முடிவுகள் செய்யப் பெற்றன. கூட்டம் 11-30 மணியளவில் முடிந்து அன்பர்கள் மாநாட்டு அமைப்பாளர் பெருஞ்சித்திரனு ரவர்களிடமிருந்து விடை பெற்றுச் சென்றனர்.

மறுநாள் காரி (9—6—73 காலைக்குள் பல ஊர்களிலிருந்தும் அன்பர்கள் கூட்டங் கூட்டமாகவும் குடும்பங் குடும்பமாகவும் மதுரைக்கு வந்து சேர்ந்தனர். கருநாடகம் மைசூர், கேரளா ஆகிய வெளி மாநிலங்களிலிருந்தும், மலேயா வினின்றும் மாநாட்டிற்காக அன்பர்கள் சிலர் வந்திருந்தனர். பொருள் வலிவிருந்து நன்றாக விளம்பரம் செய்யப் பெற்றிருந்தால், உண்மையிலேயே விடுதலை உணர்வுள்ள அன்பர்கள் பல்லாயிரக் கணக்கில் வந்து சேர்வர் என்பதுறுதி. இவ்விடத்தில் ஒருண்மையை அன்பர்கள் தெரிந்து கொள்வது நல்லது.

பொதுவாகவே ஓரியக்கத்திற்கு மூன்று வலிமைகள் வேண்டும். முதலாவது அவ்வியக்கம் கொள்கை வலிமை படைத்ததாகவிருத்தல் வேண்டும். இரண்டாவது அந்தக் கொள்கையை நன்றாக அறிந்து உறுதியுடன் ஏற்றுச் செயற்படுத்துகின்ற உறுப்பு வலிமை படைத்த தாக விருத்தல் வேண்டும். மூன்றாவதாக, அவ்வுறுப்பினர்கள் தாம் வகுத்துக் கொண்ட செயல்களில் ஈடுபட்டு வினையாற்றப் போதுமான பொருள் வலிமை படைத்ததாக விருத்தல் வேண்டும். இம்மூன்று வலிமைகளிலும் தொய்வின்றி இயங்கும் இயக்கமே தான் கொண்ட கொள்கையில் படிப்படியாக வெற்றி பெறும். இம் மூன்று வலிமை களுக்குமான அளவிட்டெண் 100 என்று கொண்டால், முதலாவ தாகிய கொள்கைக்கு 40 எண்ணும், இரண்டாவதாகிய உறுப்புக்கு 35 எண்ணும், மூன்றாவதாகிய பொருளுக்கு 25 எண்ணும் ஒதுக்கலாம். அ∴தாவது கொள்கை 8 பங்கு வலிவுள்ளதாகவும், உறுப்பு 7 பங்கு வலிவு படைத்ததாகவும், பொருள் 5 பங்கு வலிவுள்ளதாகவும் இருத்தல் வேண்டும்.

கொள்கையைப் பொறுத்த அளவில் தமிழக விடுதலை இயக்கத் -திற்கு முழு வலிமை உண்டு. ஆனால் உறுப்பைப் பொறுத்த அளவிலும் பொருளைப் பொறுத்த அளவிலும் நாம் முக்காற் பங்குக்கும் கூடுத

-லான வலிமையையும் பெற்ருகல் வேண்டும். இன்னுஞ் சொன்ஞல் நூற்றுக்கு ஐந்து பங்கு வலிமை கூட நம்மிடம் இல்லே. இந் நிலையிலும் நம் இயக்க முயற்சியில் ஏதேனும் ஓரிரண்டு வெற்றி வாய்ப்புகள் கிடைத்துள்ளன என்ருல், அது நம் போன்றவர்களால் கிடைத்த வாய்ப்பென்பதை விட நம் கொள்கைக்குக் கிடைத்த வாய்ப்பென்றே நாம் கருதிக் கொள்ளுதல் வேண்டும். உறுப்பாலும், பொருளாலும் நாம் என்றைக்கு முழுவலிமை பெறுகின்ருேமோ அன்றைக்கே நம் இயக்கம் முழு வெற்றி பெறக்கூடிய வாய்ப்பைப் பெறுகின்றது என்று உறுதியாய் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். மற்றப்படி உறுப்பு வலிமையும் பொருள் வலிமையுமின்றி வெறும் வாய்வலிமையால் 'நான் இதை வீசிக் காட்டுவேன், அதை வீசிக் காட்டுவேன்' என்று வாயால் குண்டு வீசிக் காட்டுபவர்கள் என்றென்றைக்கும் வாய் வீச்சுக்காரர்களே! அப்படி ஏதாகிலும் ஒன்றை வீசுவதற்கும் கூட இயக்கத்தில் உறுப்பு வலிமை மிகுந்திருத்தல் வேண்டும், என்பதை அவர்களும் பிறரும் உணர்ந்து கொள்ளுதல் வேண்டும். இனி மதுரை யில் நடந்ததைக் கவனிப்போம்.

9—6—73 காலே 8-30 மணியளவில் மதுரைப் பேரியங்கி நிலையத் திற்கு அருகில் உள்ள கட்டபொம்மன் சிலேயருகில் அன்பர்கள் இருவர் இருவராக அணிவகுக்கத் தொடங்கிவிட்டனர். 'தமிழக விடுதலே மாநாடு' என்றும், Liberation Conference of Thamizhnadu" என்றும் எழுதப்பற்ற பெரிய பதாகைகள் கட்டபொம்மன் வட்ட மேடையின் மேல் சாலேகளே நோக்கிக் கட்டப்பட்டிருந்தன. தெருக் களில் பார்க்குமிடங்களிலெல்லாம் 'தமிழகவிடுதலே மாநாடு' என்று நன்ருகத் தெரியும்படியான சுவரொட்டிகள் ஒட்டப்பெற்றிருந்தன. இவையன்றி மாநாட்டரங்கத்தின் (விக்டோரியா எட்வர்டு மண்டபம் அல்லது இரீகல் திரையரங்கம்) முன்பும் மற்றும் பல இடங்களிலும் பெரிய பெரிய தட்டிகளும் வைக்கப் பெற்றிருந்தன.

மணி 9 வரை ஊர்வலத்துக்கு முன்னே செல்ல வேண்டிய யானே வரவில்லே. அன்பர்கள் சிலர் யானேயை அழைத்து வருவதில் ஓட்டமும் நடையுமாக ஈடுபட்டனர். காவலர்கள் இரண்டு வண்டி களில் வந்து ஊர்வலத்தின் பின்ஞலும், ஓரத்திலும் நின்று, கொண்டனர். ஊர்வலத்தின் முன்னே தமிழக விடுதலே இயக்கத்தின் நீலமும் சிவப்பும் பாதிப் பாதி உடையதும், இடையில் தமிழ்நாடு வரையப் பெற்றுத் 'தமிழ்நாடு தமிழருக்கே' என்னும் முழக்கத்தை எழுதப் பெற்றதுமான, பெரிய கொடியை மறவர் ஒருவர் பிடித்தவாறு பெருமிதத்துடன் நின்றிருந்தார். ஊர்வலக் கூட்டத்தில்

நூற்றைம்பதுக்கும் கூடுதலான பேர்கள் நின்றிருந்தனர். கூட்டம் நிமையத்திற்கு நிமையம் மிகுந்து கொண்டே இருந்தது. மிகத் தொலை வான ஊர்களில் இருந்தவர்களுக்கெல்லாம் செய்தி பிந்தித்தான் எட்டியதாகையால் பெரும்பாலார் வருவதற்கு இயலாமற் போனது.

மாநாட்டிற்கு முந்தி வரவேண்டிய தென்மொழி வராதது ஒரு குறை. தென்மொழி வராமையால் தீச்சுடரில் மாநாடு உறுதியாக நடைபெறும் செய்தி இறுதியாக அறிவிக்கப் பெற்றுத் தென்மொழி யன்பர்களுக்கெல்லாம் விடுக்கப் பெற்றிருந்தது. ஆனால் தீச்சுடர் கிடைக்காமற் போனவர்களும் பலபேர். எனவே நண்பர்கள் வழி யாகவும், ஏற்கனவே விடுக்கப் பெற்ற அறிக்கைகள் வழியாகவும்



மாநாடு நடைபெறும் செய்தியை உறுதியாகத் தெரிந்து கொண்ட வர்களே ஊர்வல நேரத்திற்கு வர முடிந்தது. ஊர்வலத்தின் இடைப் பகுதியில் பெண்கள் நின்றிருந்தனர். தென்மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த அனைவரும் (திருவாட்டி தாமரை பெருஞ்சித்திரன் அவர்களும், அவர்களுடன் ஆறு மக்களும்) அணியில் நின்றிருந்தனர். பெருஞ்சித்திரனாரின் மூத்த மகள் திருவாட்டி பொற்கொடி இறைக் குருவன் தம் குழந்தைகள் இரண்டுடனும் ஊர்வலத்தில் நின்றிருந்தார். இவர்கள் தவிர நாடகத்தைச் சேர்ந்த ஓரிரு பெண்களும், மலைநாட்டைச் சேர்ந்த ஓரிரு குடும்பங்களும் ஊர்வலத்தில் கலந்து கொண்டனர்.

ஊர்வலத்தினர், 'தமிழர் நாடு தமிழருக்கே' 'தமிழ் நிலத்தை மீட்போம்', 'தில்லி ஆட்சிக்கு எல்லை கட்டுவோம்', 'பார்ப்பனப் புரட்டு பயனிக்காது' 'உலகத் தமிழரே ஒன்று சேருவோம்'

'அரசியல் விடுதலை அடைந்தே தீருவோம்', விடுதலை பெற்ற தமிழகம் வேண்டும்'—என்பன போலும் முழக்கங்களை எழுதிய தட்டிகளைப் பிடித்துக் கொண்டிருந்தனர். தெருக்களில் நடந்து போவாரும் வருவாரும், உந்துகளில் செல்வாரும் விடுதலை முழக்கங்களை வியப்புடன் படித்துக் கொண்டே சென்றனர். ஆசிரியர் அவர்கள் ஊர்வலத்தை ஒழுங்கு படுத்திக்கொண்டு யானையின் வரவுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்பொழுது 'பெரியார்' தம் மூடு வண்டியில் (Van) அங்கு வந்தார். ஊர்வலத்தை ஒட்டி வண்டி நிறுத்தப் பெற்றது. ஆசிரியர் பெருஞ்சித்திரனார் அவர்கள் உடனே சென்று வண்டியுள் ஏறி, பெரியாருக்கு வணக்கம் செலுத்திவிட்டு, நலம் கேட்டார். பெரியார் நலம் கூறி, ஊர்வலத்தை மேற்கொண்டு நடத்துமாறும், தாம் அருப்புக்கோட்டை சென்று மறுநாள் மாநாட்டில் கலந்து கொள்ள வருவதாகவும் கூறிச் சென்றார். யானை வர நேரமாகும் என்று தெரிந்ததால் சரியாக 9-30-மணிக்கு ஊர்வலம் புறப்படலாம் என அமைப்பாளர் பெருஞ்சித்திரனார் கட்டளையிட்டார். ஊர்வலம் புறப்படுமுன் எல்லாருக்கும் அச்சிட்டு வழங்கப் பெற்றிருந்த இருபத்தேழு முழக்கங்களையும் ஊர்வலத்தினர் ஒருமுறைக்கு மும்முறை உரக்க முழங்கி விட்டுச் செல்லத் தொடங்கினர்.

ஊர்வலம் கிழக்கு நோக்கித் திண்டுக்கல் சாலையில் சென்று கொண்டிருந்தது. திருவாளர்கள் தமிழநம்பி, அரணமுறுவல், அருட்குவை, சின்னத்துரை, கதிரவன், நெடுஞ்சேரலாதன், அரசுமணி, நாவை. சிவம், ப. அறிவழகன், பொழிலன், தேன்மொழி, பிறைநுதல் முதலியோர் பகுதி பகுதியாக நின்று, உரத்த ஒலியுடனும் மிக்க

ஆர்வத்துடனும் விடுதலை முழக்கங்களை முழங்கிக் கொண்டே சென்றனர். அவர்களைத் தொடர்ந்து ஊர்வலத்தினரும் முழக்கங்களைத் தெளிவாகவும் உரக்கவும் கூறிச் சென்றனர். வானம் சிறிது மப்பும் மந்தாரமுமாக இருந்ததால் அன்பர்கள் சுறுசுறுப்பும் ஆர்வமும் ததும்ப முழக்கமிட்டுச் சென்றதைப் பொதுமக்களும் நின்று கவனித்துக் கேட்டும், கைத்தட்டிகளில் எழுதியிருந்தவற்றைப் படித்துக் கொண்டும் சென்றனர். ஊர்வலம் செல்லுங்கால் மாநாட்டு அறிக்கைகளும், அச்சிட்ட முழக்கங்களும் பொதுமக்களுக்கு வழங்கப் பெற்றன.

ஊர்வலம் எவ்வகை இடையூறுமின்றித் திண்டுக்கல் சாலை வழியே கிழக்கு நோக்கிச் சென்று, பின தெற்கில் திரும்பி, மேலமாசி வீதியின் கடைசிக்கு ஏறத்தாழச் சென்று விட்டது. அப்பொழுது-தான் யானையும் வந்து ஊர்வலத்தின முன் பெருமிதமாகப் பிளிறியது. இயக்கக் கொடியுடன் யானை மேல் ஒருவரை அமர்த்தவும் யானையை ஊர்வலத்தின் முன்பு சரியாக நிற்கச் செய்யவும் ஏற்பாடு செய்து கொண்டிருக்கையில், உதவிக்காவல்துறை மேலாளுநர் (D. S. P.) மலையுந்தில் வந்து இறங்கினார். ஊர்வலத்தை மேலும் செல்லாமல் தடுத்து நிறுத்தினார். அவர் வண்டியை யொட்டிப் பின்

தொடர்ந்து வந்த இரண்டு மூன்று காவல் வண்டிகளிலிருந்து இரும்புத் தொப்பி யணிந்த காவலர்கள் சடசடவென இறங்கி, ஊர்வலத்தினரை முன்னும் பின்னும் பக்கவாட்டிலும் சூழ்ந்து அணிவகுத்து நின்றனர். மிக வேகமாக நடத்தி வந்த யானை

திடுமென மேலும் செல்லாமல் கட்டுப்படுத்தப் பெற்றதும், உணர்வை அடக்கமாட்டாமல் கோடைக் கால இடி முழக்கம்போல் ஊரே அதிரும்படி அடிக்கடி பிளிறிக கொண்டும், திமிறிக் கொண்டும் ஆடிக் கொண்டும் இருந்தது. அதன் பாகன் தன் கைத்தோட்டியால் அடிக்கடி அதை அடக்க முயற்சி செய்தும் களிற்றுப் பிளிறல் நொடிக்கொருமுறை வானைப் பிளந்து கொண்டிருந்தது. அந்தப் பிளிறல் 'தமிழ் நாடு தமிழருக்கே', 'அரசியல் விடுதலை அடைந்தே தீருவோம்' என்று முழக்க மிடுவதைப்போல் இருந்தது. யானைப் பிளிறல் ஊரையே அங்குக் கூட்டி விட்டது. பொதுமக்கள் சாலை யோரங்களிலும், உயரமான இடங்களிலும் நின்று வேடிக்கை பார்த்தனர்.

துணை மாவட்டக் காவலதிகாரி, ஊர்வலத்தினர் தாம் இசைவு பெற்றதற்கு மாறான முழக்கங்களை யிடுவதாகவும், அவற்றைத் தட்டிகளில் வேறு எழுதிப் பிடித்துக் கொண்டு போவதாகவும் மாநாட்டு அமைப்பாளர் திரு. பெருஞ்சித்திரனார் அவர்களை அழைத்துக் கூறி, அவற்றை விலக்குதல் வேண்டும் என்றும், அப்பொழுதுதான் ஊர்வலத்தை மேற்கொண்டு நடத்திச் செல்ல இசைவு தர முடியும் என்றும் தெரிவித்தார். அமைப்பாளர் ஊர்வலத் திற்கு முன்பே முறைப்படி இசைவு பெற்றிருக்கின்றோம் என்றும், எனவே தடுப்பது முறையன்றென்றும், ஊர்வலத்தினர் அனைவரும் கற்றவர்களாகையால் எவ்வகை வன்முறையோ கலவரமோ செய்ய முற்பட மாட்டார்களென்றும், ஊர்வலத்தை மேற்கொண்டு போக விட்டால் அமைதியாகப் போய்ச் சேர்ந்து, பிற்பகல் மாநாடும் மிக அமைதியாக முடியும் என்றும், இதனால் அரசினர்க்கோ பொது மக்களுக்கோ எவ்வழியும் தீங்கு வருவதற்கில்லையென்றும், எவரும் தங்கள் கொள்கைகளையும் கருத்துகளையும் அமைதியாகப் பரப்புதற்கு இந்திய அரசியல் அடிப்படை உரிமைச்சட்டம் இசைவு தருகின்ற தென்றும், அந்தவழி தங்களுக்கும் அவ்வுரிமை உண்டென்றும், அதைத்தடுப்பது முறையாகாதென்றும் பலவாறு மாவட்டத் துணைக் காவல் அதிகாரியிடம் அமைதியாக எடுத்துரைத்தார்.

காவல் அதிகாரி அவற்றை அமைதியாகக் கேட்டுக் கொண்டா ராயினும், எவ்வகையானும் பிரிவினை பேசுவது கூடாதென்றும், அதைச் சட்டம் ஒப்புக் கொள்ளவில்லை யென்றும் கூறி, ஊர்வலத்தை மேலே செல்ல விடாமல் தடுத்தார். பிறகு இதுபற்றி மேலதிகாரி

களிடம் பேசுவதாகக் கூறி, காவல் இயங்கியில் இருந்தவாறே தொலைபேசி வழியாக அரைமணி நேரத்துக்கும் மிகுதியாக அவர்களுடன் உரையாடிவிட்டுப் பின் திரும்பி வந்து, அமைப்பாளரிடம் 'வேண்டுமானால் நீங்கள் மாநிலத் தன்னாட்சி வேண்டும் என்று முழக்கமிடுங்களேன். அவ்வாறு செய்தால் நாங்கள் விட்டு விடுகிறோம். நீங்கள் கொஞ்சம் கவனிக்க வேண்டும். நம் முதலமைச்சர் இன்று இங்கு வரவிருக்கிறார். அவருக்கு வீண் தொல்லைகளை நீங்கள் உண்டாக்க வேண்டாம். மாநிலத் தன்னாட்சிக் கொள்கை அவருடைய கொள்கையாகவும் இருக்கிறதில்லையா?''என்றார் துணைக்காவலதிகாரி. அதற்கு அமைப்பாளர் பெருஞ்சித்திரனார் ''அக்கொள்கை முதலமைச்சருடையதாக விருக்கலாம்; எங்களுக்குத் தனிக்கொள்கை உண்டு; அதுவே தமிழகம் தில்லியாட்சியினின்று பிரிய வேண்டும் என்பது. எனவே எங்கள் கொள்கைப்படி தமிழக விடுதலை முழக்கங்களைத்தாம் எழுப்புவோம்'' என்றார். அதன்பின் அதிகாரி மீண்டும் தொலைபேசியில் தொடர்பு கொள்ளச் சென்றார். உடனே அமைப்பாளர், "இன்னும் பத்து நிமையங்களுக்குள் எங்கட்கு இசைவு தராவிடில் நாங்கள் ஊர்வலத்தை மேற்கொண்டு நடத்துவோம்'' என்றார். காவல் அதிகாரி தொலைபேசியில் உரையாடிவிட்டு, "உங்கட்கு ஊர்வலத்திற்காகவும் மாநாட்டிற்காகவும் கொடுக்கப் பட்டிருந்த இசைவு மறுக்கப்பட்டுவிட்டது'' என்றார். அதற்கு, ''அப்படிச் சொல்வது முறையற்றது. நாங்கள் முறைப்படி இசைவு பெற்றுத்தான் பெருத்த பொருட் செலவில் இந்த ஊர்வலத்தையும் மாநாட்டையும் ஏற்பாடு செய்துள்ளோம். இப்பொழுது இசைவை மறுப்பது உங்கள் பொறுப்பற்ற தன்மையைத்தான் காட்டும்'' என்றார் அமைப்பாளர். "இல்லை; நீங்கள் தென்மொழிக் கொள்கை மாநாடுதான் என்று இசைவு கேட்டுள்ளீர்கள்; இப்பொழுது விடுதலை முழக்கங்களை இடுவது தவறில்லையா?'' என்றார் அதிகாரி. உடனே பெருஞ்சித்திரனார், ''தென்மொழிக் கொள்கை என்பதே ஒரு கொள்கையாகாது. தென்மொழிக் கொள்கை என்பது 'தமிழக விடுதலை' தான். அப்படித்தான் நாங்கள் அறிக்கைகள் வெளியிட்டிருந்தோம். அந்த அறிக்கைகளை வைத்துத்தான் இசைவுக்கும் எழுதியிருந்தோம். நீங்கள் அதைச் சரியாகக் கவனிக்காமல் விட்டு விட்டீர்கள். தென்மொழிக் கொள்கை என்றால் என்ன கொள்கை என்று கேட்டிருந்தால் விளக்கியிருப்போம். நீங்கள் சரியாக விளங்கிக் கொள்ளாத குறைக்காக நாங்கள் பொருளையும் முயற்சியையும் இழக்க வேண்டுமா?'' என்று கேட்டார். (தொடரும்)

செய்திகள்

1. அறிவுடை நம்பி நீடூழி வாழி!

நெடுநாளைய தென்மொழி அன்பரும் தமிழ்ச்சிட்டு மூகவருமான பல்லடம் திருமார். ந. முத்துக்குமரன்–சேதுகாவிற்கு 26 - 1—73 அன்று ஆண்மகவு பிறந்து அதற்கு அறிவுடை நம்பி என்று பெயர் சூட்டி அதன் நினைவாகத் தென்மொழிக்கு உரு. 25-00 நன்கொடையாக அனுப்பியுள்ளனர். அவர்தமக்கு நன்றி கூறிச் செல்வன் அறிவுடைநம்பி நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

2. அரிமாத்தமிழன் நீடூழி வாழி!

நெடுநாளைய தென்மொழி அன்பர்கள் முதலை திருமார். தா. எழில்மகிழ்நன் - தமிழரசி ஆகியோருக்கு மேழம் 6-ஆம் பக்கல் ஆண்குழந்தை பிறந்து அதற்கு அரிமாத்தமிழன் என்னும் பெயரிட்டுத் தென்மொழிக்கு உரு: 5—00 நன்கொடை அனுப்பியுள்ளமைக்கு நன்றி கூறிச் செல்வன் அரிமாத்தமிழன் நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்.

3. திருமண அன்பளிப்பு!

தென்குலம் (நெல்லை) திருமார் கிருட்டிணன்–மாரியம்மாள் ஆகியோருக்கு 23—5—73 அன்று நிகழ்ந்த திருமணத்தின் நினைவாக உரு: 15—00 நன்கொடையாகத் தென்மொழிக்கு அனுப்பியுள்ளனர். அவர்தம் தமிழ் நெஞ்சிற்கு நன்றிகூறிப் பல்லாண்டு வாழ மனமார வாழ்த்துகின்றோம்.

4. தமிழ்த் திருமணம்!

கடந்த ஆடவை கஎ-ஆம் நாள் (1—7—73) 'தென்மொழி' ஆசிரியர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில், கோவை-வெள்ளலூர் (திருமார். கிருட்டிணன் - காளியம்மாள் ஆகியோரின் மகனார்) திரு. இராமசாமி அவர்களுக்கும் திருச்சி (திருமார். முத்துக்கருப்பன் – இராதாஅம்மாள் ஆகியோரின் மகளார்) செலவி கசுத்தூரிபாய் எனப்பெறும் தமிழ்ச் செல்வி அவர்களுக்கும் மதுரையில் தமிழ் மரபுப்படி திருமணம் சிறப்பாக நிகழ்ந்தேறியது. கல்லூரி ஆசிரியப்பணியில் இருக்கும் தமிழ் நெஞ்சம் கொண்ட மணமக்கள் இருவரும் எல்லா நலமும் பெற்று நீடூழி வாழ்ந்து தூய தமிழ்த் தொண்டாற்ற நெஞ்சார வாழ்த்துகின்றோம்.

5. விடுதலை!

ஆசிரியரும், அவரைச் சார்ந்த பதின்மரும் 10—6—73-இல் காவலில் வைக்கப்பெற்று 14—6—73-இல் விடுவிக்கப் பெற்றனர் என்று தெரிவிக்கப் பெறுகின்றது.

பிழை திருத்தம்: நமக்கு வந்த மடல் எண் 371-இல் பொதுவுடமை என்பதைப் பொதுவுடைமை என்று திருத்திக் கொள்க.

சிறப்புக் கட்டுரை

இலக்கியத் துறையில் தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப் பணிகள்

—பெருஞ்சித்திரன்—

(கரந்தைத் தமிழ்ச்சங்கம் 15—4—73 அன்று நடத்திய தமிழவேள் த. வே. உமாமகேசுவரனார் மணிவிழாக் கருத்தரங்கில் திரு. அ. ச. ஞானசம்பந்தன், க. மு. அவர்கள் தலைமையில் படிக்கப் பெற்ற கட்டுரை.)

1: 0: மொழியின் இன்றியமையாமை:

1: 1: மாந்த இனத்தின் அகப்புற வளர்ச்சிக்கான பல்வேறு கூறுபாடுகளில் மொழி ஓர் இன்றியமையாத உறுப்பாகும். உடல் வளர்ச்சிக்கு எப்படி உணவு முகாமையானதோ, அப்படியே உள்ளத்தின் வளர்ச்சிக்கும் மொழி முகாமையானதாகும். ஏதோ ஒரு வகையில் மொழியைச் சுவறிக்கொள்ளாத உள்ளம் வளருவதேயில்லை. மக்கள் தங்களுக்குள்ள கருத்தைப் பரிமாறிக் கொள்ளும் ஒரு கருவி என்பதாக மட்டும் மொழியை மதிப்பிட்டுவிடக் கூடாது. மொழியின் சிறப்பான பயன்களுள் கருத்தைப் பரிமாறிக்கொள்ளும் தன்மையும் ஒன்றாக விருக்கிறதே தவிர, அஃது ஒரு கருவி என்னும் அளவில் மட்டும் அதன் பயன் அடங்குவதன்று.

2: 0: மொழியின் சிறப்பியல்கள்:

மொழியின் சிறப்பியல்களைக் கீழ்வருமாறு கூறலாம்.

2: 1: மொழி அகவளர்ச்சியின் புற வெளிப்பாடாகும்.

2: 2: இவ்வுலகிற்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பைத் துலக்கிக் காட்ட மொழியைப்போல் வேறொரு வெளிப்பாடு மாந்தரிடத்தில் இல்லை.

2: 3: மொழி முக்காலத்தையும் இணைத்து நிற்கும் ஒரு மெய்ப்பாடாகும்.

2: 4: மொழியில் வெறும் எழுத்துகளோ, சொற்களோ, தொடர்களோ, கருத்துகளோ மட்டும் இல்லை. மாந்தனின் அறிவு வளர்ச்சி, உள்ள வளர்ச்சி, துய்ப்பு உணர்வு, வளர்ச்சி, வரலாறு, காலம், இடம் முதலிய அனைத்தும் அடங்கியுள்ளன. இவ்வனைத்து நிலைகளிலும் மொழி தன் கால்களை ஊன்றியுள்ளது.

2: 5: ஒலியும் ஒளியுமாய் விரிந்து நிற்கும் இப்புடவியெங்கும் அளாவியுள்ள மெய்க்கூறுபாடுகளில், ஒலிக்கூறுபாட்டை மொழி வெளிப்படுத்துவதுடன், ஒளிக் கூறுபாட்டையும் தனக்குள் அடக்கிக் கொண்டுள்ளது. எனவே, மொழி அகமும், புறமும், அகப்புறமும், புறப்புறமும் ஆகும்.[1]

2: 6: மொழி இல்லையானால் உலகம் தன் இயக்கத்தில் ஒரு பகுதியை இழந்துவிடும்.

2: 7: மொழி மாந்தனுக்கு எவ்வளவில் இன்றியமையாததோ அவ்வளவில் மாந்தன் மொழிக்கு இன்றியமையாதவன். மொழிக்கு அவன் ஆட்படுகின்றான்; மொழி அவனுக்கு ஆட்படுகின்றது.

2: 8: மொழியின் ஒவ்வொரு பகுதியும் மாந்த இனத்தின் ஒவ்வொரு பகுதியினரால் உருவாக்கப் பெற்றது. அவர்கள் மண்ணுக்குள் தங்கள் உடலையும், மொழிக்குள் தங்கள் உணர்வுகளையும் புதைத்து வைத்து விட்டுப் போயிருக்கின்றனர். எனவே மொழியுள் பழைய மாந்தரைப் புதிய மாந்தர் இனங்கண்டு கொள்கின்றனர்; புதிய மாந்தரைப் பழைய மாந்தர் வடிவமைக்கின்றனர்.

2: 9: மாந்தன் இறந்துபடுகின்றான்; மொழி இறந்துபடுவதில்லை. இறந்து போன மொழிகள் அணைந்துபோன விளக்குகள்; நிலத்துள் புதையுண்ட விதைகள். விளக்குகள் என்றேனும் கொளுத்தப் பெறலாம்; விதைகள் என்றேனும் முளைத்து வரலாம்.[2]

2: 10: தொகுப்பாகச் சொன்னால், மக்கள் இனத்தின் ஒட்டு மொத்தமான மனமே மொழி. ஒரு தனிப்பட்ட இனத்தின் காலம், இடம், பொருள் ஆகியவற்றின் பருமானங்களை அதன் மொழியில் காணலாம்.[3]

2: 11: இங்குக் கூறப் பெற்ற மொழியின் அளவை நிலைகளால் அது மாந்தவினத்திற்கு எத்துணை இன்றியமையாத உறுப்பு என்பதை விளங்கிக் கொள்ளலாம்.

---

[1] *மொழியால் நினைப்பது அகம்; மொழியால் பேசுவது புறம்; மொழியால் எழுதுவது அகப்புறம். மொழியால் கேட்பது புறப்புறம்.*

[2] *சமசுக்கிருதம், கிரேக்கம், ஈப்ரு முதலிய மொழிகள் மீண்டும் புதுக்கப் பெறுவதைக் காண்க.*

[3] *ப.்றுளி, கடாரம், துகி– இச்சொற்களில் காலம், இடம், பொருள் ஆகியவை அடங்கியிருப்பதை அறிக.*

3:0: தமிழ்மொழியின் தனித்தன்மை:

3:1: மொழிக்குள்ள சிறப்பியல்கள் அத்தனையும் விளங்கித் தோன்றும் முழுவளர்ச்சியுற்ற, உலகின் சிலமொழிகளில், தமிழ் மொழி தனிச்சிறப்பு வாய்ந்ததாகும். இதன் தனித்தன்மை ஓர் இனத்தின் தனி வரலாற்றையே உள்ளடக்கியதுடன், உலகமொழிக் குடும்பத்தின் பரந்துபட்ட தன்மைக்கே ஒருமூல ஊற்றாக விளங்கு கின்றது. இது மிகையான ஒரு கூற்றாக இல்லை என்பதை. இதன் பல் வேறுபட்ட வளர்ச்சி நிலைகளையும் அவை தொடர்ந்த பிறமொழித் தோற்றங்களையும், அறிவுக் கசடின்றி அறிந்து கொண்டவர்களே உணர முடியும். காலத்தாலும் அறிவாலும் நன்கு காத்துப்புரக்கப் பெற்றமொழி தமிழாகலின், அஃது உலகிலுள்ள மொழிகளை விட திட்பமும் நுட்பமும், செழுமையும் முழுமையும் நிறைந்து விளங்குவதை இக்கால் எல்லா மொழியினரும் உணர்ந்து வருகின்றனர். அஃது ஒரு வரலாற்றுப் பெட்டகம் போல் இருந்து. மாந்தனின் மன வளர்ச்சிக்கு வேண்டிய அனைத்து அறிவுக் கருவூலங்களையும் உள்ளடக்கிக் கொண் டுள்ளது. அது கரணியப் பொருளாய் நின்று உள்ளுணர்வொடு கலந்த, அகக்கரண வளர்ச்சிக்கும். கருமப் பொருளாய் விளங்கி உறுப்பொடு கலந்து நின்று, புறக்கரும வளர்ச்சிக்கும் அடிப்படையாக விருக்கின்றது.

4:0: மொழியும் இனமும்:

4:1: பெரும்பாலும் மொழிவளர்ச்சி, அது பேசப்பெறும் இனத்தின் வளர்ச்சியை ஒட்டியே அமைவதாகலின், தமிழின வளர்ச்சி தடைப் பட்ட பொழுதெல்லாம், தமிழ் மொழியின் வளர்ச்சியும் தடைப்பட்டே வந்திருக்கின்றது. தமிழினத்தில் வேற்றினக் கலப்பு ஏற்பட்ட பொழு தெல்லாம், தமிழ் மொழியிலும் பிற மொழிக் கலப்பு ஏற்பட்டு வந்திருக் கின்றது.

4:2: இது போலவே இனப்பரவல் நேரும்பொழுதெல்லாம் மொழிப் பரவலும் நேரும். தமிழ் மொழி தமிழினப் பரவலை அடியொட்டி, உலகமெலாம் பரந்துபட்டு, வேறு பிற உலக மொழிகளுக்கும் மொழி மூலங்களை வழங்கியிருக்கின்றது.[4] இவ்வாறு இனப் பரவலால் மொழிக்கொடையும் இனக்கலப்பால்மொழித்தடையும் நேர்ந்திருக்கின்றன.

[4]சமசுக்கிருதத்தில் ஐந்திலிரு பகுதி முழுத் தமிழ்ச்சொல். ஐந்திலிரு பகுதி தமிழ் வேரின்ன்று திரிந்த திரிசொல். ஐந்திலொருபகுதி இடுகுறிச் சொல், —தமிழர் மதம்— பாவாணர்.

தெலுங்கு :	நான் - நேனு	ஆம்-அவனு	நெருப்பு-நிப்பு
	நாம் - மேமு	ஆகாது-காது	செருப்பு- செப்பு

5:0: மொழிக்கலப்பும் மொழிக்கடனும் :

5:1: இனப்பரவல் வாணிகம், அரசுத் தொடர்பு-இவற்றை அடிப்படையாகக்கொண்டு நிகழுமாகலின், மொழிக்கொடையும் அவற்றுக் கேற்பவே நிகழ்ந்திருக்கும். மேலும், இனப்பரவலால் நாகரிகமும், பண்பாடும் பரவுமாகலின் அவ்வகையினும் மொழிக்கொடை நிகழும். அதே முறையில் இனக்கலப்பின் வழியாக மொழிக்கலப்பும் நேரும்.

	அது - அதி	அழுத்து - அத்து	பருப்பு - பப்பு
	அவை - அவி	உருக்கு - உக்கு	விருந்து - விந்து.
பிராகுவி :	அப்பா - பாவா	அம்மா - லும்மா	நீர் - தீர்
மராத்தி :	அக்கை - அக்கா	செடி - ஜாடு	மீசை - மிசா
	கிண்ணம் - கிண்ண	பழம் - பள்	வட்டி - வாட்டி
	குடும்பு - குடும்ப	பித்தளை - பீத்தல்	
	குயில் - கோயில	பெட்டி - பேட்டி	
	சாலை - சாலா	மனம் - மன்	
இந்தி :	ஆம் - ஹாம்	ஓரம் - ஓர்	சப்பட்டை - சப்ட்டா
	இத்தனை - இத்ந	கட்டில் - காட்	சுக்கு - சூக்
	உம்பர் - உப்பர்	கன்னல் - கன்ந	நோக்கு - தேக்
	பதம்(சோறு) - பாத்	பிள்ளை - பில்லா	முகரை-முக்ரா
டியுத்தானியம்:	கூவு - coo	பிளிறு - blare	மகன் - magus - mac
ஆங்கிலம்	கரை - cry	உறு - roar	குட்டி - kid
	ஊள் - ஊளை - howl	சப்பு - sup	குருளை - gurle, girl
	கனை - neigh	தின் - dine	பையன் - boi. boy
	புல்லம் - bull	சுறவு-shark	எல்லாம் - eall, all
	பூசை(பூனை)-puss-pusy	நாகம்-snake	மெது-smooth
சமசுக்கிருதம் :	அம்மா - அம்பா	நாவாய் - நௌ	மெது - ம்ருது
	கத்து (கத்தி) - க்ருத்	பொறு - பர்	
	துருத்து - தூத்	மாது - மாத்ரு (பெண்)(தாய்)	
இலத்தீனம் :	பொள் - பொர்	வலி - வலி	முழுகு - மெர்கு
	பொறு - பெர்	வலம் - வேலர்	மடி - மொரி
	விடலை - வித்ல	விழி - விதெ	பார் - பரெ
கிரேக்கம் :	மாத்திரை - மேத்ரு	காண் - க்னோ	
	இலக்கம் - லியூக்கோஸ்	அல் - அன் - அண்	
	கணு - கொனு		
	நாவாய் - நௌஸ்	கும் - சிம்	

—வடமொழி வரலாறு —பாவாணர்.

5:2: மொழிக்கலப்பு என்பது தமிழ்மொழியைப் பொறுத்த அளவில் மொழிக் கடன் அன்று. இல்லாத ஒன்றைப் பெறுவதே கடன் ஆகுமாகலின், தமிழ்மொழியில் வந்து கலந்த சொற்கள் இல்லாமையின் தேவையால் கடன் வாங்கப் பெற்றவை யல்ல. தமிழ் மொழி மொழிக் கடன் பெறும் அளவிற்கு வறுமையுற்ற மொழியில்லை. அஃது ஒரு நிறை மொழி; சொற் செல்வ மொழி. எனவே, தமிழ்மொழி பெற்றது கடனன்று; கலப்பே யாகும். இக் கலப்பும் அரசு மாற்றத் தாலும், இன மேலீட்டாலும் (ஆதிக்கத்தாலும்) ஏற்பட்டதாகும்.

6; 0: அரசு மாற்றமும் இனமேலீடும்:

6: 1; தமிழினத்தைப் பொறுத்த வளவில் அரசு மாற்றமும் இன மேலீடும், தமிழ்க்குமுகாயத்தைப் பெரும் சிதைவுகளுக்குள்ளாக்கி யிருக்கின்றன. அச்சிதைவுகளுள்-எல்லாம் தலையாயது மொழிச் சிதைவே யாகும். இச்சிதைவு சீரழிவு என்று கூறுமளவிற்குப் பெருத்த மாற்றத்தை மொழி நிலையில் ஏற்படுத்தி விட்டது என்று சொன்னாலும் மிகையில்லை. இதற்குத் தமிழ் மக்களின் மடித்துயிலும், அக்கறையின்மையும், இரக்கவுணர்வும், ஒற்றுமையின்மையும் கரணியங்களாகும். அரசு மாற்றத்தாலும் இனமேலீட்டாலும் ஏற்பட்ட பிற இழப்புகள் வரலாற்றுச் சிதைவும், இனமேம்பாட்டுக் குறைவும், குமுகாய இழிவும், மூட நம்பிக்கைப் பித்தமும், இன அடிமை யும், அரசிழப்பும் ஆகும். எனவே இவற்றினின்று தமிழினத்தை மீட்டாலொழிய மொழிக்கலப்பையும் சிதைவையும் சீரழிவையும் தடுத்து நிறுத்தவே முடியாது.

7: 0: மொழிச்சிதைவே தலையாய வளர்ச்சித் தடை:

7: 1: கடன் பெறுதல் ஏழைக்கு வளர்ச்சியையும் செல்வர்க்குத் தளர்ச்சியையும் தருவதாகும்.[5] எனவே, தமிழ்மொழிக் கொடைபெற்ற பிற ஏழ்மை மொழிகள் வளர்ச்சியுற்ற அதே பொழுதில், செல்வ

---

[5] அமுல், அலமாரி, அசல், அந்தஸ்து, அம்பாரி, அத்தர், அலாதி, அனுமத், அமீனு, இலாக்கா, இனும், உஷார், உறுமால், கஜானு, கச்சேரி, கம்மி, கவுல், கருர், காபரா, கிச்சடி, கித்தான், குஸ்தி, குல்லா, குல்கந்து, கைதி, கொத்தவால், சால்வை, சிபாரிசு, ஜதை, ஜாலி, ஜாமீன், ஜிமிக்கி, ஜோக்கு, ஸவாரி, ஸபாஸ், சலாம், சவால், சிப்பாய், சொக்கா, சொகுசு, சோம்பு, டப்பா, டமாரம், டப்பாசு, டப்பி, டபாய்த்தல், டபேதார், டம்பம், டவாலி, டஜன், டாணு, டாம்பீகம், டால், டிங்கி, டிமிக்கி, டேரா, டோலக், தஸ்தாவேஜு, தபால், தர்பார், தகரார், தண்டால், தமாஷ், தயார், தாகீத், தாவா, தாலுகா, தாக்கல், திவான், திவால், துப்பட்டா, தோலா, நகல்,

மொழியாகிய தமிழ்மொழி மொழிக் கலப்பால் தளர்ச்சியுற்றது. மொழிக்கலப்பால் தமிழ்மொழியைத் தாக்கிய மொழிகளுள் முதலானது ஆரிய மொழியாகிய சமசுக்கிருதமே. அவ்வகையில் தாக்கிய பிறமொழிகள் அரபியம், போர்த்துக்கீசியம், பிரஞ்சியம், ஆங்கிலம் முதலியவையாகும்.

7: 2: தமிழ்மொழிக் கொடையால் வளர்ச்சியுற்ற மொழிகளுள்ளும் முதலாக நிற்பது சமசுக்கிருதமே! பிறமொழிகள் கிரேக்கம், இலத்தீனம், தியுத்தானியம், ஆங்கிலம் முதலியவை. சாக்சானியத்தினின்றும், கிரேக்க இலத்தீனத்தினின்றும் உருவாகிய இற்றை ஆங்கிலத்தில் கூட கணிசமான ஒரு பகுதிச் சொற்களுக்குத் தமிழ் மொழி மூலங்களை வழங்கியிருக்கின்றது என்று அறிதல் வேண்டும்.[6]

7· 3: ஒரு மொழி வளர்ச்சிக்குள்ள தடைகள் அனைத்திலும் மொழிக்கலப்பால் நேர்கின்ற மொழிச் சிதைவே தலையாய தடையாகும். மொழிக்கலப்பு, மொழியை வளரச் செய்யும் என்பது, வந்து கலக்கின்ற மொழியையும் அக்கலப்பை ஏற்றுக் கொள்கின்ற மொழியின் தன்மையையும் பொறுத்ததாகும். ஆங்கிலத்துள் சாக்சானியம், இலத்தீனம், கிரேக்கம், பிரஞ்சியம், இசுப்பானியம், நார்வேனியம், அசீரியம், தியுத்தானியம், ஈப்ரு,

---

நாகாஸ், நபர், நவாவு, நமுனு, நாஜர், நாஷ்டா, நாடா, நிஜார், பக்கா, பக்கிரி, பங்கா, பங்கி, பஞ்சாயத், பந்தோபஸ்து, பஸலி, பட்டா, பரவாயில்லை, பலே, பல்டி, பர்பி, படே, பவுஷ், பஜார், பாரா, பாக்ஷா, பாதுஷா, பிராது, புகார், பேஜார், பேட்டி, பேஷ், பைசல், பைல்வான், மஹால், மனு, மசோதா, மசூதி, மக்கர், மஸ்து, மாமூல், மாஸூல், மாஜி, மிட்டா, மிட்டாய், மிராசு, முகாம், முலாம், முச்சலிக்கா, முண்டாசு, முஸ்தீபு, முன்சீப், முன்ஷி, மேஸ்திரி, மேஜை, மோஸ்தர், ரஜா, ரஸ்தா, ராஜி, ராஜிநாமா, ருஜு, லட்டு, லங்கோட், லகான், லப்பை, லாடு, லாயக், லாயம், லோடா, வக்கீல், வக்காலத், வசூல், வஜா, வஸ்தாத், வாய்தா, ஹுண்டி, ஹோதா, ஷர்பத், ஷிகார், ஷோக், காஜி, சந்தா, துக்கடா, தபா, தினுசு, திவாலா, துபாஸ், படா, பாக்கி, புல்லாக்கு, பேமானி, பேசரி, போணி, மராமத்து, மாமூல், லாடம், லேவாதேவி, லுச்சா, வாபீஸு, ஸந்நாசி, சாவி, ஜன்னல், வியாஸம், ஏகோபித்து, நிரூபம், யோஜி, சீசா, ஜல்தி, திராணி, ராணுவம், பீப்பாய், கிராக்கி, நயம், ரொட்டி, தண்டோரா, செல்வாக்கு, பகோடா, ஜாடை, படுதா, பில்லை, லஞ்சம், சாம்பார், சட்ணி, நிதானம், சொஜ்ஜி, பஜ்ஜி, லாந்தர், ஜம்பம், தகவல், கோப்பை, எஜமான், வஸதி, கமான், வங்கி, கொலுசு— முதலிய எண்ணிறந்த சொற்கள் இன்றும் கலந்து வழங்கி வருவதால் தமிழ் அடைந்தது தாழ்வே என்க.

[6] See, "Tamil-its contribution to the Europeon Languages"-by K. C. A. Gnanagiri.

கெல்திக், பிரெசியன், ஆப்பிரிக்கன், செருமானியம், கோதியம், அங்கேரியம், அரேபியம், சிலாவனியம், ஐரிசு, உரோமானியம், பல்கேரியம், போர்த்துக்கீசியம், சமசுக்கிருதம், திரவிடம், துருக்கியம், சீனம், உருசியம், டேனியம், அக்கேடியம், பின்னியம் முதலிய பலமொழிகள் கலந்ததாலேயே அது வளர்ச்சியுற்றுப் பரவலாக வழங்குகின்றது. இன்று உலகில் ஆங்கிலத்தைத் தங்கள் தாய்மொழி போல் கருதிப் பேசும் மக்கள் ஏறத்தாழ முப்பது கோடிப் பேர் ஆகும் சீனத்திற்கு அடுத்தபடி மிகுந்த மக்களால் பேசப்படும் மொழி அது.

8:0: இனத்திரிபும் மொழித்திரிபும்:

8:1: ஆங்கிலம் போலும் ஒரு மொழி தன்னை அறவே இழந்து விட்ட நிலையில் உலகில் எங்கும் இல்லை. அதற்கு அதுவே சிறப்பான நிலை என்று சொல்லும்படி அஃது இருக்கிறது. ஆங்கிலம் தன் பெயரைக் காப்பதற்குக் கூடப் போதுமான அளவில் அதற்குரிய மொழிச் சொற்களைக் கொண்டிருக்கவில்லை என்பதை நாம் அறிந்தால், அது மொழிக்கலப்பால்தான் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்பதை நாம் ஒப்புக் கொள்ளல் வேண்டும். ஆனால் தமிழ் மொழிக்கு நேர்ந்த மொழிக் கலப்பு அதன் மொழியைத் தூய்மையிழக்கச் செய்ததோடன்றி, அதனை இழிவடையவும் செய்தது. இன்னுஞ் சொன்னால் அதன் மொழிவளர்ச்சியைத் தடுத்து, அதன் இனத்தையும் மலையாளம், தெலுங்கு, கன்னடம், துளுவம் முதலிய மொழியினங்களாகப் பிரிவுறச் செய்தது. மொழிக்கலப்பு நேர்ந்திருக்க வில்லையானால், இந்தியாவின் பேரினம் தமிழினமாகவே இன்றுவரை இருந்திருக்கும் என்பதில் ஐயமில்லை. மேலும், மொழிக்கலப்பும் ஒலிக்கலப்பு மன்றோ தமிழினின்று மலையாளம், தெலுங்கம், கன்னடம், துளுவம், குடகம், துடவம், கோத்தம், கோண்டி, கொண்டா, கூய், ஒராஒன், இராசமகால், பிராகுவீ, குருக்கு, குவீ, பர்சீ, கடபம், மாலத்தோ, நாய்க்கீ, கோலாமீ முதலிய மொழிகள் பிரிந்து வழங்க வழி வகுத்தன.

8:2: இனத்திரிபுக்கு முன்னை நேர்வது மொழித்திரிபே! இனத் திரிபால் ஓர் இனத்தின் மக்கள் பரப்புக் குறைவது போலவே, மொழித்திரிபால் ஒரு மொழியில் உள்ள சொற் பரப்பும் குறையும்[1] இது மொழி வளர்ச்சியைப் பல்லாற்றானும் பெரிதும் தடைப்படுத்துவ

[1] மலையாளம் முதலிய மொழிகள் பிரிந்தமையால், தமிழினத்தின் ஒரு பகுதியினமும் தமிழ் மொழியுள் ஒரு பகுதிச் சொற்களும் மொத்தத் தொகையினின்று குறைந்து போனதை ஓர்க.

தாகும். குறைவுள்ள மொழிக்கு மொழிக் கலப்பு நிறைவு தரலாமே யன்றி, நிறைவுள்ள ஒரு மொழிக்குக் குறைவு தருவதுடன் கேடு விளை விப்பதுமாகும். முலைப்பால் இல்லாத ஒரு முழு மலடி வேண்டுமானால், தன் வளர்ப்புக் குழந்தைக்கு விலைப்பாலைப் புகட்டலாம். முலைப்பால் உள்ள ஒரு நற்றாய் எதற்குத் தன் குழந்தைக்கு விலைப்பாலைப் புகட்டல் வேண்டும்? அவ்வாறு வீம்புக்காகப் புகட்டுவது அவளுக்கும் அக் குழந்தைக்குமே கேடு தருவதாகும். எனவே, மொழி வளர்ச்சிக்கு முதல் தேவையானது, அதன் மொழிக்கலப்பற்ற தன்மையே என அறிந்து கொள்க.

9:0: மொழிக்கலப்பும் ஒலிக்கலப்பும் ;

9:1: இனி, மொழிக் கலப்பைப் போன்றதே ஒலிக்கலப்பும். ஒரு மொழியோடு வேறுமொழி வந்து கலக்கும்பொழுது, பின் மொழியி லுள்ள சொற்களைப் பலுக்குவதன் பொருட்டு, அதன் ஒலிக் குறியீடு களை முன்மொழியிலும் புகுத்தி வழங்கி வருவதே ஒலிக் கலப்பாகும். இவ்வொலிக் கலப்பு முன் மொழியிலுள்ள இயல்பான சொற்கள் சில வற்றைக் கூட மாறி வழங்கச் செய்து விடும். (ஜீரகம், ஜீனி, ஜவுளி முதலிய சொற்களைக் கவனிக்க). எனவே இவ்விருவகைக் கலப்பு நிலை களும் ஒரு மொழியின் இயல்பான வளர்ச்சியைப் பெரிதும் கெடுத்து விடும். தமிழ்மொழியைப் பொறுத்த மட்டில், இவ்வொலிக் கலப்பும், மொழிக் கலப்பும் அதன் வளர்ச்சியைப் பெரிதும் தாக்கியொடுக்கியே வந்துள்ளன. இவ்விரு கலப்பு நிலைகளும் அறவே இல்லாதிருந்த காலத்தில் தமிழ்மொழி வளர்ச்சி தன்னிகரற்று விளங்கியிருந்ததும், அதன் அடிப்படையில் அமைந்த இலக்கிய வளர்ச்சியும் அதற்குத் தக மிகச் சிறந்திருந்ததும், அக்கலப்பு நிலைகள் வளரவளர மொழிவளர்ச்சி யிலும், இலக்கிய வளர்ச்சியிலும் ஒருவகைத் தேக்கம் ஏற்பட்டதும், இன்னுஞ் சொன்னால், ஆக்கம் மிகுவாகக் குறைந்து போனதுமே மேற் கூறிய கூற்றுக்கான சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

10:0: மொழியும் இலக்கியமும் :

10:1: எண்ணமே மொழியாக வெளிப்படுவதால், மொழியே இலக்கியத்திற்கு விளை நிலமாகும். விதை எத்துணை உயர்ந்ததாக விருப்பினும், நிலமில்லாமல் அதை விதைத்தலும், வேளாண்மை செய்தலும் இயலாது போலவே, எண்ணம் எத்துணைச் சிறந்ததாக விருப்பினும் மொழியின்றி இலக்கிய வேளாண்மையும் நடவாது என்க. இனி, மொழியின்றி எண்ணமும் தோன்றாது போகும். பேச்சு நிலையற்ற குழந்தை எண்ணத்திலும் விளக்கமுறாதிருப்பதும், பேச்சு விளங்க விளங்க எண்ணமும் வலுப்பெற்று வளர்வதும், அப்படியே

எண்ணம் வலுப்பெற வலுப்பெறப் பேச்சும் விளங்கித் தோன்றுவதும் ஊன்றிப்பார்க்கையில் மொழிக்கும் எண்ணத்திற்கும் உள்ள தொடர்பு விளங்கும்.

10:2; இனி, ஒருவர் எத்துணையளவு உலகியலறிவு வாய்ந்தவரா யிருப்பினும், மொழித் திறனற்று விளங்குவாரானால், அவரால் இலக்கியத்தைச் சமைக்கக் கூடுமோ, கூடாதாம் என்க. இனி, அவ்வாறின்றி மொழித்திறனுள்ள ஒருவர் உலகியலறிவு சிறிதே வாய்க்கப் பெற்றிருந்தாலும்கூட, அவர் ஓரளவு இலக்கிய வாக்கத்தில் சிறந்திலங்க முடிவதைக் காண்கின்றோம். எனவே, இலக்கிய வாக்கத்திற்கு வேறு பல திறன்கள் வேண்டுவன எனினும், மொழித்திறன் இன்றி இலக்கிய வாக்கமே நடவாது எனலாம். இங்கு, ஒருவர் ஒரு மொழியைத் தெரிந்து கொள்ளுதல் வேறு, அவர் அம்மொழியில் திறனுடையராதல் என்பது வேறு என அறிந்து கொள்ளுதல் வெண்டும்.

10:3: மொழியை அடியூன்றிக் கற்கக் கற்கவே இலக்கிய வாக்கம் பெருகும். மொழியைக் கற்றல் என்பது அம்மொழி அளாவி நிற்கும் இலக்கிய இலக்கணங்களைக் கற்றலும், அம்மொழியில் உள்ள வேறு பல துறை நூல்களைக் கற்றலும் ஆகும். வெறும் மொழியே எப்படி இலக்கியம் ஆகி விடாதோ, அப்படியே வெறும் எழுத்தே மொழியாகி விடாது. ஒருவர் கற்கும் ஒருமொழி நூல்களுள் அம்மொழி தன் மெய்ந்நிலையோடு இயங்கவில்லையானால், அவர் அந்த மொழியை அறிந்து கொள்ளுதல் எப்படி?

11:0: இலக்கிய வாக்கமும் மொழி வளர்ச்சியும் :

11:1: உயிரும் உடலும்போல் மொழியும் இலக்கியமும் ஒன்றையொன்று ஒட்டி உயிர் வாழ்வனவாகும். மொழியுயிர்ப்பு இருந்தால்-தான் இலக்கிய வுடல் இயங்கி வாழ்ந்து கொண்டிருக்கும். இலக்கிய உடலைப் பற்றிக் கொண்டுதான் மொழியும் இவ்வுலகில் இயங்குதல் வேண்டும். மொழி இறந்து போன நிலையில், அதில் எழுதப்பெற்ற இலக்கியத்திற்கு எவ்வகை வாழ்வும் இல்லை. வெறும் பூதவுடலைப் பாடஞ்செய்து, காட்சிச் சாலையில் காத்து வைப்பது போல், இறந்து போன மொழியின் இலக்கியத்தை நூலகத்தில் வைத்துக் காத்துக் கொண்டிருக்க வேண்டியதுதான், எனவே, ஒருமொழி உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்றால், அதில் உள்ள இலக்கியமும் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கின்றது என்று பொருள், இனி, அம்மொழியின் வாழ்வில் மொழிக் கலப்பும் ஒலிக் கலப்பும் ஏற்பட்டு, அது சீரழிந்து

கொண்டிருக்கின்றது என்றால், அதில் உள்ள இலக்கியங்களும் சீரழிந்து கொண்டிருக்கின்றன என்று பொருள். இனி, அந்த மொழி படிப்படியாக உருமாறித் தன் உயிர்ப்பை அறவே இழந்துவிடும் பொழுது, அதில் உள்ள இலக்கியங்களும் உயிர்ப்பை இழந்துதான் ஆகல் வேண்டும். எனவே, எவ்வாற்ருனும் மொழியும் இலக்கியமும் ஒன்றின் வளர்ச்சியால் மற்ருென்று உயிர் வாழ்கின்றது என்பதையும், மொழிச் சிதைவு நேரும் பொழுதெல்லாம் இலக்கியச் சிதைவும் கூடவே நேர்கின்றது என்பதையும் நாம் ஒப்புக்கொண்டாகல் வேண்டும்.

11: 2: தமிழ் மொழியில் கழகக்கால விலக்கியங்களைப்போல் மிகவும் சிறந்தனவும், கட்டுக் கோப்பு நிறைந்தனவும், என்றும் நின்று, உயிர்வாழும் தரமுடையனவும், இடைக்காலத்திலும் பிற்காலத்திலும் தோன்ருமைக்குக் கரணியம், படிப்படியாக ஏற்பட்ட மொழிக் குலேவே ஆகும். ஒருமொழியின் இலக்கிய வாக்கத்தை அந்த மொழிதான் உருவாக்கவும் காத்துக் கொள்ளவும் முடியும் என்பதை அறிந்து கொள்க. பிறமொழி இலக்கியமாளுலும், அதை நம் மொழியில் நம் மொழிமரபு கெடாமல் செய்தாலொழிய அது நம் இலக்கியம் என்று கூறிக் கொள்ளல் முடியாது.[8]

12: 0: இலக்கியத்தில் மொழியாளுமை:

12: 1: மொழியும் இலக்கியமும் உயிரும் உடலும் என்று கண்டோம். ஆனுலும், உயிரோடு உடல் இயங்குதகையில் உயிர்ச் சிறப்பை உடல் எண்ணிப் பாராமலும், உயிருக்கு நேரும் ஊறுபாடுகளை முன் நினையாமலும், அக்கறையின்றித் தன் விருப்பப்படி தூறுமாருகச் சிற்சில நேரங்களில் இயங்கி, உயிரை வருந்தச் செய்வது போல், மொழிக்கு நேரும் ஊறுபாடுகளை எண்ணிப் பாராமல் இலக்கியவாக்கமும் சிற்சிலகால், சிலரால், தட்டுக்கெட்டுத் தடுமாறி, மொழிக்குச் சிதைவை ஏற்படுத்துகின்றது. அக்கால் மொழி வளர்ச்சி குன்றுகிறது. மொழி வளர்ச்சி குன்றவே இலக்கிய வளர்ச்சியும் குறைவுபடுகின்றது. ஆனுல், உடற்சிதைவையும் உயிர்ச்சிதைவையும் உணர்ந்து கொள்ளாமல், மேலும் மேலும் நம் விருப்பப்படியே நாம் நடந்து கொள்வதைப் போலவே, மொழிச்

[8] எ–டு: கம்ப இராமாயணம், வில்லிபாரதம், இரட்சண்ய யாத்திரிகம், நைடதம், மனேன்மணியம் முதலியவற்றை நோக்குக!

சிதைவையும், இலக்கியச் சிதைவையும் உணராமலேயே சிலர் மேலும் மேலும் தம் மனம் போன படியெல்லாம் இலக்கியத்தை ஆளுவர். ஆனால், நோய்த் தன்மையை மருத்துவர் ஒருவர் உணர்ந்து எச்சரிப்பது போல், மொழிச்சிதைவையும் அத்துறை வல்லுநர்களே அறிந்து எச்சரிக்கை செய்ய முடியும். அவ்வெச்சரிக்கை புறக்கணிக்கப்படும் பொழுது, இருவழியும் சிதைவு-கள் மிகுதியாகி, உடல் அழிந்து படுவதைப் போல் இலக்கிய வளர்ச்சியும் அழிந்து படுகின்றது. இலக்கிய வளர்ச்சி அழியவே மொழிநிலையும் அழிவுறுகின்றது. இதனால் இலக்கிய வாக்கத்தில் மொழியாளுமை எவ்வகையில் அளாவி நிற்க வேண்டும் என்பதை நன்கு அறிந்து கொள்க. மொழிச் சிதைவை உண்டாக்குகின்ற இலக்கிய வாக்கம் அதன் வளர்ச்சி நிலைக்கே கேடு செய்கிறது எனலாம்.

13: 0: இலக்கியத்தின் சிறப்பியல்கள்:

13: 1: இனி, இலக்கியம் என்பது என்ன என்பது பற்றியும், அதன் சிறப்பியல்புகள் பற்றியும் ஒரு சிறிது எண்ணிப் பார்ப்போம்.

13: 2: "சிறந்த அறிவுணர்ச்சி உள்ளவரின் சிறந்த எண்ணம், சிறந்த மொழிவுயிர்ப்புடன், சிறந்த பொருள் நிலையைப்பற்றி வெளிப்படும் சிறந்த அமைப்பே இலக்கிய மாகும்". இன்னுஞ் சுருக்கமாகச் சொன்னால், "ஓர் உள்ளம் மொழி வழியாக இன்னோர் உள்ளத்தில் போய்க் கரைந்துவிடும் நிலையே இலக்கியம்" ஆகும். இன்னமும் சுருங்கச் சொல்வதானால், 'உள்ளத்தின் காலடி இலக்கியம்".

13: 3: இலக்கியத்தின் புறவடிவங்கள் பலவாகலாம். அவை இசையாகவும் இருக்கலாம்; இயலாகவும் இருக்கலாம்; நாடகமாகவும் இருக்கலாம். இனி, இவையுங்கூட பல உருவமாக விருக்கலாம். எதுவாக விருப்பினும் உண்மை இலக்கியத்திற்குப் பிறப்புண்டு; இறப்பில்லை. இலக்கியத்தில் உள்ளம் படிகின்றது; நுகருகின்றது; உறக்கம் கொள்கின்றது; தன்வாழ்க்கைக் களைப்பைப் போக்கிக் கொள்கின்றது. இறுதியில் அதைப்பற்றிக் கொண்டு தன்னோடு உறைய வைத்துக் கொள்கின்றது.

13:4. இலக்கியமில்லாத மொழி விளைவற்ற கறம்பு நிலம் போல் காட்சியளிக்கும். மக்களுக்கு உள்ளச் செழுமை ஊட்டுவது

இலக்கியமே! உண்பதும், உடுப்பதும், உழைப்பதும், உறங்குவது மாகக் கிடந்துழலும் வறட்சி வாழ்க்கையில். இலக்கியம் பசுமை யையும், மணத்தையும் பரவச் செய்து கிளர்ச்சியை உண்டாக்கு கின்றது. அது, கடந்த காலத்தை நினைவூட்டி, நிகழ் காலத்தை ஒரு பிடிப்புள்ளதாக்கி, எதிர் காலத்தில் நம்பிக்கை கொள்ளச் செய்கின்றது. மக்களின் உள்ளம் கட்டுப் பாடற்ற காட்டு மாடாய்த் தட்டுத் தடுமாறிப் போகாமல் இருக்க, இலக்கியம் மூட்டுக் கொடுத்து அதனைத் தடுத்தாள்கின்றது. மாந்தனின் முருடு முருடான போக்கை வழவழப்புடையதாக்கி, அவன் உள்ளத்தில் அறவுணர்ச்சியையும், மெய்யறிவுணர்வையும் பாய்ச்சுகின்றது. இலக்கியம் உணராதவன் உள்ளம் சிடுசிடுப்பு நிறைந்ததாகிப் பல சிக்கல்களை எதிர்நோக்கத் தகுதியற்றதாகப் போய்ச் சில நேரங்களில் தொய்ந்தும் போகின்றது. ஆனால், இலக்கியவுணர்ச்சி நிறைந்தவனின் உள்ளமோ, எதையும் தாங்கிக் கொள்ளும் ஆற்றல் பெற்றதாகி, எத்தகைய இடர்ப்பாட்டுக்கும் ஈடு கொடுக்கும் வலுவுடையதாகச் செய்து கொள்கின்றது. பொறி யியக்கம் உடையது போன்ற வாழ்வை, உயிரியக்கம் நிறைந்ததாகச் செய்து தருவது இலக்கிய வுணர்வே!

13:5: எனவே, மக்கள் வாழ்க்கைக்கு இலக்கிய வுணர்ச்சி மிகவும் இன்றியமையாத தென்க. இனி. இத்தகைய இலக்கிய வாக்கம செய் கின்ற ஓர் இலக்கியப் புலவனின மனநிலைகளைப் பார்ப்போம.

***14:0:* இலக்கியப் புலவனின் மன நிலைகள்:**

14:1: இலக்கியம் பெரும்பாலும் மாந்தனின் உள்ளுணர்ச்சி களின் தொகுப்பாக அமைவதால், மனத்தின் நெளிவு சுழிவுகளை யெல்லாம் அதில் பார்க்கலாம். எப்பொழுதும் மனத்தைத் தாக்கு வன மாந்தனின் நிறைவேறாத ஆசைகள், கரடு முருடான எண் ணங்கள், மறை முகமான ஏக்கங்கள், பொறாமை உணர்வுகள், பகைமை நினைவுகள் முதலியவையே! அந்நினைவுகளின் புகைச்சல் களையும் குமிழிகளையும் ஓர் உணர்வுப் புலவனின் பேரிலக்கியத் தில் வரும் உறுப்பினர் படைப்புகளில் பார்க்கலாம். தன் நிறை வேறாத ஆசைகளின் வடிவங்களைக் கற்பனையால் அவனே படைத்துக் கொண்டு, இலக்கிய வடிவில் துய்க்கின்றான். அவ் வகைக் கற்பனை தலைமாறிப் போகாமல் உள் நின்ற ஒரு நடு நிலை உணர்வு அவனைக் காக்கின்றது. சிற்சிலகால் அவ்வுணர்ச்சி புற

வுலகச் சூழல்களால் தாக்குண்டு, அவ்விலக்கிய வுணர்ச்சியைக் கட்டவிழ்த்து விடுகின்றது. அது பொழுது அவனால் படைக்கப்படும் இலக்கியங்களும் படிப்பாரின் அகவுணர்வைப் பலவகையாலும் அலைவுறச் செய்கின்றன. எனவே, ஓர் இலக்கியப் புலவன் தன்னை அக நோக்காகவும் புற நோக்காகவும் கண்டு தெளியவும் அவற்றின் இழிவு சிறப்புகளைத் தானே அறியவும் ஆற்றல் பெற்றவனாக விருத்தல் வேண்டும்.

14: 2: எல்லாவற்றிலும் சரேலென எம்பிப் பாயும் மனவுணர்வு படைத்தவனே இலக்கியவாக்கத்தில் வெற்றி பெறுகின்றான். மேடுகளில் மட்டுமின்றிப் பள்ளங்களிலும் அவன் உணர்வு சடக்கெனத் தாவிக் குதிக்கின்றது. ஓர் இலக்கியப் புலவன் காற்றைப் போலும் கடுகிய மனநிலை உள்ளவனாகவும், நீரைப் போல் நெகிழ்ச்சியும் பரந்துபட்டு ஒழுகும் தன்மையும் உள்ளவனாகவும், நெருப்பையொத்த பொது நோக்குடையவனாகவும் இருத்தல் வேண்டும். அவன் பார்வையில் கழுகுக்கிருப்பதைப் போலும் ஒரு கூர்மை இருக்க வேண்டும். செவிகள் வேட்டை நாய்களுக்கிருப்பதைப் போல் மிக்க நுண்ணுணர்வு உடையனவாக விருத்தல் வேண்டும். மொழியோ அவனுக்கு ஒரு வேலைக்காரனைப் போல் பக்கத்தில் நின்று அவன் அழைக்காத முன்னமே வந்து உதவுதல் வேண்டும். சொற்களுக்காக இறவாணத்தைப் பார்க்கும் எந்த இலக்கியப் புலவனும் இலக்கிய வாக்கத்தில் வெற்றி பெறுவதில்லை. அந்நிலையில்தான் அவன் உலக நடைமுறைகளை நன்றாகக் கருத்தில் வாங்கிக் கொள்ளவும், எழுத்தில் உலவ விடவும் முடியும். அவ்வாறு செய்ய வியலாதவனால் பிறர் உள்ளங்களைப் போய்த் தொட்டு உலுக்கி, அங்குத் தனக்கென ஓர் இடத்தைப் பிடித்துக் கொள்ளும் இலக்கியத்தை செய்தல் இயலாது. மொழியின் சொல் வண்ணங்களைக் கொண்டு அறிவு என்னுந் தூரிகையால், மனம் என்னும் திரையில் எழுதிக் காட்டும் எண்ணங்கள் எனும் ஓவியங்களே இலக்கியங்களாக மலர்கின்றன. எனவே, இலக்கியச் சிறப்புக்கு மொழிச் சிறப்பே வண்ணமாக அமைந்து நிறமாலைகளை உண்டாக்குகின்றது. மொழி வெளிர் வாங்கும் பொழுது இலக்கியமும் வெளிர் வாங்கி விடுகின்றது. எத்துணையாற்றல் இருப்பினும் மொழியாற்றல் இல்லையானால் ஒருவன் செய்யும் இலக்கியத்தில் எண்ண அடர்த்தி இடம் பெறுவதில்லை.

15: 0: இலக்கியக் கட்டுக் கோப்பு:

15: 1: எப்பொழுதும் கூர்மையான சொல்லாக்கமே இலக்கியத்தைக் கட்டமைத்து, எக்காலத்தையும் எதிர்கொண்டு நிற்கும்படி வலுவுடையதாக்குகின்றது. மொழிநடை காலத்திற்குக் காலம் மாறுபடுகின்றது என்பது உண்மையே! ஆனாலும் இலக்கியத்தில்தான் மொழியின் மூல நிலைகள் பதிந்து வைக்கப் பெறுகின்றன. மொழி இலக்கியத்தில் வேரூன்றி, மக்களின் புற ஈடுபாடுகளில் அண்ணாந்து தலைவிரித்து நிற்கின்றது.

15:2: மக்களின் மொழியே காலத்திற்குக் காலம், நாளுக்கு நாள், இடத்திற்கு இடம், அவர்களின் உணர்வு மாற்றங்களுக்கும் வாழ்வியல் தாக்குதல்களுக்கும் ஏற்ப மாறுபாடு அடைவது. இலக்கியமோ நிலையான மலைகளைப் போல நின்று தன் மொழியைக் கட்டிக் காவல் செய்கின்றது. இவ்வகையில் உலக மொழிகளில் இல்லாத ஒரு பெருஞ்சிறப்பைத் தமிழ் மொழியில் பார்க்கலாம். தமிழ் இலக்கியங்கள் உலகின் வேறு எந்த மொழி இலக்கியங்களைக் காட்டிலும் மொழிச் சிறப்பும், எண்ணச் சிறப்பும் பெற்றுத் திகழ்வதற்கு ஒரு வாறு மொழியமைப்பும் காரணியம் என்க. இலக்கிய மொழியும், பேச்சு மொழியும் பழந்தமிழ் மொழியறிஞர்களாலேயே பாகுபாடு செய்யப் பெற்றுக் கடலைப்போலும் அதன் கரையைப் போலும் அருகருகு நிலைநின்று இயங்கி வருகின்றன. காலச் சேதங்களால் கரையின் வடிவம் பல்வேறு மாறுதல்களுக்கு உட்பட்டாலும், கடல்போல் மொழிச்சிறப்பு தமிழ் இலக்கியங்களில் தேங்கி நிற்கின்றது. இந்நிலை வேற்று மொழி இலக்கியங்களில் காணப்படுவது அரிது.

15:3: ஆனால், இக்கால், கடலுக்குள்ளும் ஏற்படும் உள்ளரிப்புகளைப் போல், இலக்கிய மொழி நடையிலும் சில தொய்வுகள் ஏற்பட்டு வருகின்றன. இவை இயற்கையாக ஏற்பட்டு வருவனவாகக் கொள்ள முடியாது. செயற்கையாக-சில உள்நோக்கங்களுக்காக – அல்லது அறியாமை அடிப்படையாக-சிலர் வேண்டுமென்றே செய்யும் உள் தோண்டுதல் வேலை என்றே சொல்லுதல் வேண்டும். இல்லெனில் அவை சுட்டிக் காட்டப் பெற்ற பின்னும் தொடர்ந்து செய்யப்பெற்று வருமா? மொழிவளர்ச்சியை விரும்புவோர் முதலில் இத்தகைய உள்ளரிப்புகளை இனங்கண்டு கொள்ளுதல் வேண்டும். இந்த உள்ளரிப்புக்காரர்கள் மக்களை நேரிடையாக இலக்கிய உலகுக்கு அழைத்து வருவ

தாகச் சொல்லியே அவற்றைச் செய்து வருகின்றார்கள். மொழி என்பது அவரவர் விரும்புகிறபடியெல்லாம் கட்டமைத்துக் கொள்ளும் ஒரு தனி நிலைக் கோட்பாடு அன்று. தனியான ஒருவனுக்கு மொழி தேவையில்லை. எனவே மொழி எல்லாருக்கும் பொதுவான ஓர் இயற்கை விளைவு ஆகும். அதைத் தனியான ஒருவன் அவனின் மனக் கோணல்மாணல்களுக்குத் தக்கபடி சிதைத்துக் கையாளுதல் குமுகாயக் கொடுங்குற்றமாகும். அவன் அதைப் பிறர்பொருட்டே கையாளுதல் வேண்டுமாகலின், பிறரின் மரபு நிலைப்படி அவனும் அதைக் கட்டிக்காத்தல் அவனின் தவிர்க்க முடியாத கடமையாகின்றது. ஓர் ஆற்று நீரை எவனும் அள்ளிக் குடிக்கலாம். அதை அவன் மாசு படுத்துதல் கூடாது. அவ்வாறு அவன் தன் தனிநிலை உரிமையால், பொது நிலைக்குத் தகாத முறையில் ஊறுபாடு விளைவிப்பானானால், அவனைக் குற்றவாளியாகக் கருதித் தண்டனை யளிக்க வேண்டும். இக்கால் அக் காத்தல்நிலை இல்லாமல் இருப்பதே, நாம் மொழி நிலையில் வளர்ச்சிபெற முடியாமற் போவதற்குக் கரணியமாகும்.

15:4: இனி, அப்புன்மையாளரின் மொழி நிலைச் சிதைவுகளால் உருவாக்கப்பெற்ற இலக்கியங்கள் நெடுநாளைக்கு நிற்கும் வல்லமை பெற்றன வல்ல. சருகுகள் போன்ற எளிய மொழி நடைகளில் பற்றுகின்ற இலக்கிய நெருப்பு கால ஊழிகளுக்கு ஈடு தரும் கனப்புடையதாக விருப்பதில்லை, அவை அடுத்து வரும் சிலவாண்டுகளிலேயே பூத்துச் சாம்பலாகப் போய்விடுவதை அவர்கள் உணர்தல் இயலாது. கீழை இலக்கியங்களிலும் சரி, மேலை இலக்கியங்களிலும் சரி மொழிக் கோப்பு அமைந்த இலக்கியங்களுக்கு ஒரு தனிச் சிறப்பு இருந்து வருவதை அறிஞர்கள் கூர்ந்து கவனிக்க வேண்டும்.

15:5: இவ்விடத்தில் ஒன்றைத் தெளிவாக அறிந்து கொள்ளுதல் நல்லது. மொழிநடையின் கட்டுக்கோப்பு என்பது, பொது மக்களுக்கு அயலான அல்லது அவர்களின் கருத்துப்படி-கடினமான சொற்களால் அமைந்த நிலையே அன்று. சொல்லில் கடினமானது என்றும் எளிமையானது என்றும் இல்லை. நாம் அறியாத எளிய சொல்லும் கடினமே, நாம் அறிந்த அரிய சொல்லும் எளியதே! கல்லாதவர்களுக்கு எல்லாச் சொற்களும் கடினந்தான். பொதுவாகப் புழக்கத்தில் எண்பது தொண்ணூறு விழுக்காடு பயின்றுவரும் சொற்களை எளிய சொற்கள் என்று நாம்

கூறி வருகின்றோம். இருபது முப்பது விழுக்காடு பயிலும் சொற்களைக் கடினமான சொற்கள் என்று கருதுகிறோம். மற்றப்படி சொல்லில் கடுமையோ எளிமையோ என்பவெல்லாம் வெற்று மயக்கமே!

15: 6: மண்ணினால் கட்டப்பெறும் வீடுகள் கட்டுதற்கு எளியவைதாம். முயற்சியும் குறைவுதான். பரவலாகவும் கட்ட இயல்கின்றவை அவை. ஆனால் அவற்றை நம்மில் எவரும் விரும்பாதது, ஏன்? அவற்றின முயற்சி எளிமையையும் செய்பொருள் எளிமையையும் போலவே, நிலைப்பும் எளியதாகி விடுவதே! வெயிலுக்கும், மழைக்கும் ஈடு கொடுக்க முடியாமல் அம் மண் வீடுகள் விரைவில் சிதைந்து போவதில்லையா? அப்படிப் போன்றவைதாம் 'எளிய' சொற்களால் கட்டமைக்கப் பெற்ற 'எளிய' இலக்கியங்களும்.

15: 7: சென்ற இருபது முப்பது ஆண்டுகளுக்கு முன் விரும்பிப் படிக்கப் பெற்ற வடுவூர் துரைசாமியார், ஆரணி குப்புசாமியார் முதலியவர்களின் புதினங்களை இன்று எத்தனை இளைஞர்கள் அறிந்திருப்பர்? ஆனால் அவை அக்காலத்தில் செலுத்திய இலக்கிய மேலாண்மைகள் எவ்வளவு தெரியுமா? புகழேந்திப் புலவரின் பாநடை தழுவிய கதைமாலைகளை இன்று எத்தனைப் பேர் படித்துச் சுவைக்கின்றார்கள்? புறநானூறும் திருக்குறளும் கைகளில் வைத்திருக்கும் பொழுதே நமக்கு ஒருவகைப் பெருமையை அளிப்பது ஏன்? ஓமரையும் மில்டனையும் சேக்சுபியரையும் இளங்கோவையும், கம்பரையும் எத்தனை ஊழிகளானாலும் எவராகிலும் அழித்துவிட முடியுமா? காலந்தோறும் அவை புதிதாக முளைத்து முளைத்துக் காட்சிதருகின்றன என்பதை எவரேனும் மறுக்க முடியுமா?-முடியாது- ஏன? இங்குத்தான் மொழி நடையும் சொற்கோப்பும் இலக்கியவுணர்வைக் கட்டிக்காக்கும் இறும்பூதைக் கண்டு கொள்ளல் வேண்டும்!

15:8: மொழிபற்றிக் கவலைப்படாமல், சொல்லோட்டங்களைத் தம் கருத்தோட்டங்களுக்கு ஏற்பப் பஞ்சு போலாக்கிப் பறக்க விடுகின்ற இன்றைய எழுத்தாளர்களின் கோபுர விலக்கியங்கள், அடுத்து வரும் ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகளில், குப்பை மேடுகளுக்குப் போகாமல் காத்துக் கொள்ளும் ஆற்றல் சான்றவை என்பதைக் காலந்தான் உறுதி செய்ய முடியும்.

16:0: கருத்தும் நடையும்:

16:1: இலக்கியங்களுக்கு மக்கள் பேசுகின்ற மேலோட்டமான மொழிநடை தேவைப்படவே படாதா என்று கேட்கலாம். அவ்வாறு எவரும் சொல்லவில்லை. தேவையும் தேவையின்மையும் மக்களின் மெலிந்த, வலிந்த உணர்வுகளைப் பொறுத்தன. ஆனால் நீடித்து நிற்கும் ஆற்றல் சான்ற இலக்கியங்களுக்குக் கட்டுக்கோப்பான மொழிநடை வேண்டும் என்பதே காலம் நமக்குக் காட்டுகின்ற உண்மை. ஆத்திசூடி, கொன்றைவேந்தன் போன்ற மென்மையான அறவிலக்கியங்கள் கூட மக்களுக்கு இன்னும் தேவைப் படுகின்றனவே-ஏன்? அவற்றின் மொழிநடை அவர்கள் கருதும் அளவில் மிக எளிமையாகத்தானே இருக்கின்றது. இதில் என்ன உண்மையென்றால், அவற்றில் தேக்கி வைக்கப் பெற்ற கருத்துக ளுக்கு ஏற்ப மொழிநடையும் மென்மையாக விருப்பதாலேயே அவை காலத்தை எதிர்த்து நிற்கின்றன.

16: 2: இலக்கியத்தில் கூறப்பெறும் கருத்துகளுக்கு ஏற்ப மொழி நடையும் அமையப் பெறவேண்டும் என்பதே இங்குச் சுட்டப் பெறுகின்ற உண்மை என்று தெளிந்து கொள்ளுதல் வேண்டும். இரும்பைப் பஞ்சுத் துணியில் மூட்டை கட்ட முடியாது. பஞ்சை வைக்க இருப்புப் பெட்டியும் வேண்டுவதில்லை. நமக்கோ பஞ்சும் வேண்டும்; இரும்பும் வேண்டும். பஞ்சை, சணல் பையிலும், இரும்பை மரப்பெட்டி அல்லது இருப்புப்பெட்டி இவற்றிலும் வைத்துக் காக்க வேண்டும். வெள்ளி நகைகளில் எவரும் வைரத்தைப் பதிப்பதில்லை. நன்செய் நிலத்தில் எவரும் விழலை வைத்து வளர்ப்பதில்லை. வித்துக் கேற்ற நிலம், பொருளுக் கேற்ற பேழைபோலவே கருத்துக்கேற்ற மொழி நடை கட்டாயம் வேண்டும் என்பதை நாம் மறந்து விடுதல் கூடாது.

16: 3: நடை எளியதாகத்தான் இருக்க வேண்டும் என்று சொல்லப் பெறுவது எப்படிப் பிழையோ, அப்படியே நடை திட்பமானதாகத்தான் இருக்க வேண்டும் என்று ஒன்று குத்தலாகச் சொல்வதும் பிழையே! கருத்துக் கேற்ற நடை வேண்டும் என்பதே இலக்கியவாக்கத்தில் காலத்தைக் கடக்கும் ஆற்றலுடையது. புறநானூற்றுக் கருத்துகளை நிலைமண்டிலத்தில் எழுதியிருந்தாலும், உலகப்பன் பாட்டைக் கலிப்பாவில் எழுதியிருந்தாலும் என்றோ இரண்டும் அழிந்துபோயிருக்கும்!

16: 4: ஈசல்களைப் போல் பொலபொல வெனப் பூத்து வெளி வந்து சிறகடித்துப் பறக்கும் இலக்கியங்கள் காலத்துக்கே ஏருவாகின்றன. அவை சிறந்தன, உயர்ந்தன என்று எத்தனைதாம் வான்முட்டப் பேசி வாய்ப்பறை கொட்டினாலும், காலையில் தோன்றி மாலையில் கருகி நிற்கும் காளாம்பிகளைப் போல், அவையும் விரைந்து அழிந்துபோக விருப்பதைப் பார்க்கையில், அவற்றின் இலக்கிய வாசிரியர்கள் மேல் இரக்கப்படாமல் இருக்க முடியாது.

16: 5: மற்று, இலக்கியம் எந்த வடிவில் வேண்டுமானாலும் இயங்கலாம். பாட்டு, உரைநடை, கதை, கட்டுரை, பழமொழி, ஒப்பாரி, தாலாட்டு, விடுகதை முதலிய யாவும் இலக்கியப் பெருமை வாய்ந்தனதாம். இவை கருத்திற் கேற்பவும், மொழித்தரத்திற் கேற்பவும், மக்கள் மனநிலைக்கேற்பவும், காலநிலைகளுக்கேற்பவும், அமைந்து, நிலைத்து நிற்கவும் அழிந்து போகவும் செய்கின்றன. கழகக் காலப் பாடல்கள் நிற்பதைப் போலவே, அன்றிருந்த பழமொழிகளில் சிலவும் இன்று வாழ்வதைப் பார்க்கின்றோம். மாந்தரின் உணர்வு நிலைகளின் அடியூற்றங்கள் என்றென்றும் ஒன்று தானே! அவர்களின் புறமாறுபாடுகளால் அவை அழிவுறுவதில்லை. எனவே கருத்தும் நடையும் மொழிக்கு இருகரைகள போல் இருந்து, இலக்கியத்தைக் கட்டிக் காக்கின்றன.

17:0: இலக்கிய வகை :

17:1: இலக்கியங்கள் பலவகையன. மாந்தனுக்கு மிக இன்றி யமையாத உணர்வுகளான காதலும் வீரமும் தழுவிய இலக்கியங்களே மக்களைப் பெரிதும் கொள்ளை கொள்ளுகின்றன. உலக இலக்கியங் களிலேயே காதல் இலக்கியங்களும் வீர இலக்கியங்களுந்தாம் மிகுதி. இவை தவிர, சமய விலக்கியங்களும், அற விலக்கியங்களும், போர் இலக்கியங்களும், இன விலக்கியங்களும், குல விலக்கியங்களும், வரலாற்றிலக்கியங்களும், குழந்தை இலக்கியங்களும் உண்டு. இவற்றிலும் அவையவற்றின் தரங்களுக்கேற்ப மொழிநடை மாறுபடுவதுண்டு.

17:2: இக்காலத்தில் குல, இன இலக்கியங்களுக்கு மதிப்பில்லை. அறவிலக்கியங்கள், சமயவிலக்கியங்கள் ஆகியவற்றிற்குங் கூட இளைஞர்களிடத்தில் அத்துணை வரவேற்பில்லை. காதல் இலக்கியங்

களும், வீர இலக்கியங்களும் என்றும் போல் வரவேற்கப் பெற்றாலும் உணர்வு நிலைகளில் சிறிது மாறுபட்டு விளங்குதல் வேண்டும் என எதிர்பார்க்கின்றனர். இக்கால் செய்யப்பெறும் அவ்வகை இலக்கியங் களில் பாலியல் உணர்ச்சி பெரிதும் புகுத்தப் பெறுகின்றன. இடைக் காலத்துப் புலவர்கள் சிலர் எழுதிய தூது, உலா, மடல், அந்தாதி என்னும சிற்றிலக்கிய வகைகளில் இடையிடையே பாலியல் உணர்வு தூண்டப் பெற்று வந்தன. அவற்றைப் பெரிதும் சுவைத்த செல்வர் களுக்காகவும், சிற்றரசர்களுக்காகவும் அவ்வாறு எழுதப் பெற்றன. அவற்றுள் சொல்லாரவாரத்திற்காகவும், சுவைக்காகவும் தமிழ்மொழிச் சொற்களுடன் வடமொழிச் சொற்கள் வரைதுறையின்றிக் கலக்கப் பெற்றன. மொழியைப் பற்றி அக்கறையற்ற வறுமைப் புலவர்களே, மூடச் செல்வர்களிடம் பரிசில் பெறவேண்டி அவ்வகை இலக்கியங் களை ஏராளமாக எழுதிக் குவித்தனர். அவை மொழிச்சிறப்பிழந்தமை யால், காலச்சிறப்பும் இழந்து கணக்களவில் எண்ணப்பெறுகின்றன.

17:3: கழகக் காலத்திற்குப்பின் உள்ள இலக்கியங்களில் மொழி நடை வீழ்ச்சியும், தரக்குறைவும், இயற்கையறிவுக் குறைவும், வெற்றுச் சொற்புணர்ச்சியும் தெற்றெனப் புலப்படுகின்றன. இலக்கிய நீள்மை அவற்றில் மிகுந்து காணப்பெறுகின்றது; சமய வெறியும், மூட நம்பிக்கைகளும் அவற்றில் மிகுந்திருக்கின்றன; போர் வெறிகள் குமிழியிடுகின்றன. இவ்வாரவாரப் போலியுணர்ச்சிகளிடையே மொழி ஒரு பொருட்டாக மதிக்கப் பெறவில்லை. பிற்கால இலக்கியங் களில் மொழிவீழ்ச்சியுற்றதற்கு அறிவுக்குறைவும் ஒரு கரணியமாகும். மக்களின் அறிவு வளர்ச்சியைப் பொறுத்ததே மொழி வளர்ச்சியும். அறிவு நிலை திரியும் பொழுது மொழி நிலையும் திரியும்; இலக்கிய நிலையும் திரியும் என்பதற்கு அவை தக்க சான்றுகளாய் அமைந் திருக்கின்றன.

18:0: இக்கால இலக்கிய நிலை :

18:1: இக்காலத்தில் உள்ள இலக்கிய நிலைகளை எண்ணும் பொழுதெல்லாம் மனம் நிறைவடைவதேயில்லை. இலக்கிய வாக்கத் திற்கே மிக இன்றியமையாதனவாகிய கருத்தும் மொழியும் அவற் றுள் மிகவும் தாழ்ச்சியுற்றுக் கிடக்கின்றன. கண்டதே காட்சியாக வும், கொண்டதே கோலமாகவும் இக்கால இலக்கியங்கள் வடிக்கப் பெறுகின்றன. கதையிலக்கியமும் கட்டுரையிலக்கியமுமே மிகுதியும்

இக்காலத்தை ஆட்கொண்டுள்ளன. மக்கள் மனத்தில் ஆழப்பதியும் இலக்கியவுணர்வு, வாழ்க்கைப்பாதையில் தலைதெறிக்க ஓடும் இக்கால மாந்தரிடை மருந்துக்கும் காண முடிவதில்லை. கதைகளிலும் சிறுகதை யிலக்கியமே பெரிதும் வரவேற்கப் பெறுகின்றது. அப்பொழுதைக்கப்பொழுது சுவைத்துமிழும் இலக்கியங்களே பெரிதும் எழுத்துலகை ஆட்சி செய்கின்றன.

18: 2: இக்கால மக்கள் ஆழமாக எண்ணுவதில்லை. இலக்கியவுணர்ச்சியைப்பற்றிப் பெரும்பாலார்க்கு உயர்வான கருத்தில்லை. சமய விலக்கியங்களுக்கு இடைக்காலத்தில் இருந்ததைப் போன்ற மதிப்பு ஓரளவிருந்தாலும், அவற்றைப் பரப்புவதில் ஒருவகை உள் நோக்கமும் மக்களை ஏமாற்றும் தன்மையும் மிகுதியும் கடைப்பிடிக்கப் பெறுகின்றன. இலக்கிய உலகிலும் அரசியல் புகுந்து அதன் உயர்ந்த நோக்கத்தைத் திசை திருப்பிச் செல்லுகின்றது. இடைக்காலத்துப் பாலியல் உணர்வோடு, மேனாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப் பெற்ற இழிவுணர்வும் இரண்டறக் கலந்து, இக்கால இலக்கியங்களில் பரக்கக் காணப்பெறுகின்றன. மனத்தைச் செப்பப் படுத்தும் இலக்கியத்தின் உயர்ந்த உட்கொள்கை, புறத்தே தூக்கியெறியப் பெற்றுவிட்டது. அவ்வப்பொழுது எழும் உடலுணர்ச்சிகளுக்கும், வாழ்க்கையின் மேடு பள்ளங்களுக்கும் இக்கால இலக்கியத்தில் ஏராளமான இடம் ஒதுக்கப் பெறுகின்றது. வாழ்க்கைத் துயரங்களை மறந்து, மனமாசுகளைக் களைந்தெடுக்கவே பயன்பட்டு வந்த இலக்கியங்கள், இக்கால் அவற்றை அப்பட்டமாக எடுத்துரைப்பதற்கே பயன் படுத்தப் பெறுகின்றன. எனவே இவ்விலக்கியங்களைப் படிக்கும் ஒருவரின் மனமாசுகளும் வாழ்வுத் துயரங்களும் களையப் பெறுவதற்கு மாறாக, அவை மேலும் அவர் மனத்தில் ஏறி நின்று, நினைவுப் புயல்களை எழுப்பி, அவரை அடிக்கடி அலைக்கழிக்கவே முற்படுகின்றன.

18:3: இக்கால் இலக்கிய வரலாறுகள், ஆய்வுரைகள் எழுதுகின்ற புலவர்களும் அந்த வீழ்ச்சியை வெளிப்படையாகச் சுட்டிக் காட்டுதற்கே அஞ்சுவதுடன், போலித்தனமாகவும் விருப்பு வெறுப்புடனுமே அவற்றைக் காசுக்காக எழுதித் தள்ளுகின்றனர். உயர்ந்த கல்லூரிகளில் பணியாற்றும் மொழிப் புலவர்களிடையே கூடத் தாய் மொழிப் பற்று குதிரைக் கொம்பாக விளங்குகின்றது. மொழியைக் காட்டிக்

கொடுத்து அவர்கள் பிழைக்கும் தன்மைகளைப் பார்த்தால் எதிர்காலத்-தில் தமிழ் இவர்கள் கைகளிலேயே நசுக்குண்டு புதைந்து போகுமோ என அஞ்ச வேண்டியுள்ளது. அவர்கள் இடைக்காலப் புலவர்களைப் போல் பொருள் நசைக்காகவே மொழி வாணிகம் செய்வதாகப் படுகின்றது. இக்கால இலக்கியங்களிலும் பாடநூல்களிலும் மொழிநடை கவனிக்கப் பெறுவதே யில்லை. இங்குள்ள செய்தித்தாள்களிலும், கிழமை, மாத வெளியீடுகளிலும் மொழிக்கொலையும் இலக்கிய வேள்வியும் அன்றாடம் நடைபெறுகின்றன. இவ்வகையில் பொதுமக்களின் மொழியறிவை இலக்கிய வாசிரியர்கள் பெரிதென மதிக்கும்படி செய்து விடுவார்களோ என்றுகூட எண்ண வேண்டியிருக்கின்றது. இலக்கியத் திறனாய்வாளர்களும் இக்கால் உள்ள போலி நிலைகளைக் கவனியாது புறக்கணிப்பாகவே இருந்து வருகின்றனர்.

18: 4: இக்காலப் பாட்டிலக்கியத்தைப்பற்றி எண்ணிப் பார்க்கவே வருத்தமாயிருக்கின்றது. வாய்க்கு வந்ததைப் பாடுவது ஒரு மரபாகவே கடைப்பிடிக்கப் பெற்றுவருகின்றது அவற்றில் உள்ள கரு, கூறப்பெறும் கருத்து, கையாளப்பெறும் மொழிநடை, யாப்புநிலை—யாவும் மேலோட்டமான புல்லிய நிலைகளையே பற்றி நிற்கின்றன. எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை என்பவெல்லாம் குப்பைக்குப் போய் அழுகத்தொடங்கி விட்டன. அவற்றிற்கெல்லாம் கட்டுப்படாத சொல் எம்பல்கள் அமைந்த உரை நடைத் தொடர்களே பாடல்கள் போல் மடக்கி எழுதப்பெறுகின்றன. வில்லியும் ஒட்டக்கூத்தனும் இக்கால் வந்தால், அவர்கள் காதுகளும் கைகளும் ஒட்ட நறுக்கப் பெற்றாலும் வியப்பதற்கில்லை! மொழி இன்றுள்ள இலக்கிய மேய்ப்பர்களிடையே படாதபாடு படுகின்றது.

18. 5: தமிழ் மொழியில் உள்ள சொற்களில் பத்துப் பதினைந்து விழுக்காட்டுச் சொற்களே இக்கால் பயன்படுத்தப் பெற்று வருகின்றன. பெரும்பாலும் ஒரு பொருளுக்குள்ள பல்வேறு பண்புகளைக் குறிக்கும் பல சொற்களில் ஒன்றோ இரண்டோதாம் திரும்பத் திரும்பக் கையாளப் பெறுகின்றன. மிகுதியுள்ள சொற்கள் தேவையற்ற சொற்பட்டியல் என இழித்துரைக்கப் பெறுகின்றன. இக்கால இலக்கிய ஆசிரியர்களுக்குத் தலைமுடி நிறைந்து பம்மியிருந்தால் மூளை பெரிதென்று கருதப் பெற்று விடுகின்ற-தால், எல்லாரும் தலைமுடியை முள்ளம் பன்றியைப்போல் சிலிர்ப்பிவிட்டுக் கொண்டு திரிகின்றனர்.

18. 6: ஆழமற்ற உணர்வு, ஆழமற்ற அறிவுநிலை, ஆழமற்ற மொழித்திறன், ஆழமற்ற வாழ்க்கை நிலைகள் இவற்றிலேயே இலக்கியவாக்கம் முடிவடைந்து இலக்கிய வெற்றியும் கிடைத்து விடுகின்றது. மனத்தின் மிக எளிய நிலைகளிலேயே மக்கள் நிறைவடைந்து விடுகின்றனர். நரம்புத் தளர்ச்சியுள்ளவன் தன் மனைவியைத் தொட்டவளவிலேயே நிறைவடைந்து விடுவதைப் போல், மூளைத்தளர்ச்சியுடைய இன்றைய எழுத்தாளர்கள், மொழியைத் தொட்ட அளவிலேயே முதறிவுற்றவர்களாக மதிக்கப் பெறுகின்றனர்.

18: 7: மேற்கூறப் பெற்ற நிலைகளுக்கெல்லாம், மக்களிடை அறிவியல் உணர்வு தலைதூக்கியதே கரணியம் என ஓர் அமைவு கூறப் பெறுகின்றது. அரசியல் மேலீடே கரணியம் என்றும் ஒருசார்பில் உரைக்கப் பெறுகின்றது. எப்படியும் இலக்கியத்தரம் தாழ்ந்து போவது மக்களிடை மனவுணர்வுக் குறைபாட்டையே காட்டும். அவர்களிடை இக்கால் ஏற்பட்டிருக்கும் பண்புச் சிதைவுக்கும், ஒட்டுறவு இல்லாத நடைமுறைகளுக்கும், அவர்தம் மேலோட்டமான இலக்கியவுணர்வே பெருங்கரணியமாம் என்க.

19: 0: மொழிநிலை உயர்வு:

19: 1: எஃது எவ்வாறுயினும் இந்நூற்றுண்டின் முற்பகுதியிலிருந்த மொழிப் புறக்கணிப்பு நிலை, இக்கால் ஓரளவு குறைந்து வருவதை ஒரு புறத்தில் பார்க்கின்றோம். அந்நிலை எதிர்கால இலக்கிய வளர்ச்சியில் ஒரு நம்பிக்கையை ஊட்டுகின்றது. கற்றவர்களிடையில் உள்ள ஒரு கணிசமான தொகையினரிடை மொழிப் பற்று விழிப்புற்று வருகின்றது. தமிழ் நாட்டிலும் தமிழர்கள் வாழ்கின்ற அயல் நிலங்களில் சிலவற்றிலும், மொழியின் பெயரால் கழகங்களும், மன்றங்களும், இயக்கங்களும் தோன்றிச் செயற்பட்டு வருகின்றன. இந்நிலை பெரிதும் ஆறுதலளிக்கின்றது. தனித்தமிழ் வளர்ச்சிக்கென ஓர் இயக்கமே தோன்றி மக்களிடை தெளிவான மொழி நடையை உருவாக்கி வருகின்றது. அரசியல் மேலீட்டால் அயன்மொழி வல்லாண்மை ஓங்கி வந்ததும், அதனை எதிர்க்க ஒரு போராட்டமே நடத்தப் பெற்றதும், எதிர்கால நம்பிக்கைக்கு இன்னும் வலிவூட்டும் நிகழ்ச்சியாய் அமைந்திருந்தது.

19: 2: பள்ளிகளிலும் கல்லூரிகளிலும் உள்ள மாணவர்கள் தம்மிடையில் தமிழுணர்ச்சி ஓரளவு வேரூன்றி வருகின்றது. மொழியுணர்வு கொளுத்திய பாவேந்தர் பாரதிதாசனின் பாடல் முழக்கங்கள் ஆங்காங்கே கேட்கப் பெற்று வருகின்றன. மறைமலை

யடிகளாரின் தமிழும் ஒரு தமிழா எனக் கேட்கப் பெற்றநிலை சிறிது சிறிதாக மறைந்தொழிந்து, அவர் தோற்றுவித்த தனித் தமிழ் இயக்கம் மெல்லெனப் பரவிவருகின்றது. மறைமலை யடிகளாரைப் பின்பற்றி மொழி ஞாயிறு தேவநேயப் பாவாணரின் தலைமையில் தூய் தமிழியக்கம் செயலாற்றி வருகின்றது.

19: 3: இத்தகைய மொழி வளர்ச்சியை யொட்டித் தமிழ் இலக்கியத்திலும் ஒருவகைப் புத்துணர்வு பிறந்து வருவதை எவரும் மறுக்க முடியாது. தமிழ் மறுமலர்ச்சியுற்று வருவதை யடுத்து, நல்ல தரமான நடையில் கதையிலக்கியங்களும், சிறு கதை இலக்கியங்களும், பாட்டிலக்கியங்களும் தலையைக்காட்டி வருவது மனத்துக்குத் தென்பூட்டுகின்றது. இந்நிலைகளை மேலும் ஊக்கப் படுத்துவதற்குரிய ஆக்கப் பணிகளில் நாம் கவனம் செலுத்தும் காலமும் வந்து விட்டது என்றே சொல்லலாம். அத்தகைய வகையில் என்ன பணிகளைச் செய்யலாம் என்பதுபற்றிச் சிறிது எண்ணிப் பார்ப்போம்.

20: 0: தமிழ் வளர்ச்சிக்குரிய ஆக்கப் பணிகள்:

20: 1: நம் செந்தமிழ் மொழியில் உள்ள பழைய இலக்கியங்கள் என்றென்றும் தத்தம் தனிப்பெருமையைப் பறைசாற்றி நிற்கும் என்பதில் துளியும் ஐயமில்லை. ஆனால், அத்தகைய பெருமை நிலைகளுக்கெல்லாம் இழுக்கு நேரும் வகையில், இக்கால இலக்கியம் இழிந்து படுவதையும், அதையொட்டி மொழி இழிந்து வருவதையும் நாம் முதற்கண் தடுத்து நிறுத்தியாகல் வேண்டும். மொழித் தகவற்ற இலக்கியத் தோற்றங்களைத் துணிந்து கடிவதற்கு நாம் கற்றுக்கொள்ளல் நல்லது. ஆட்சி நிலைகளில் தவறு கண்டால், நாம் இடித்துரைப்பதைப் பழகிக்கொண்டது போல், நம்மைச்சுற்றி எழும் போலி இலக்கியங்களையும் அவ்வாறு தட்டிக் கேட்பதற்கு நாம் பழகிக் கொள்ளுதல் வேண்டும்.

20: 2: ஊருக்கு ஒன்றாகவோ, மாவட்டத்துக்கு ஒன்றாகவோ இலக்கியக் கழகங்களைத் தோற்றுவிக்க வேண்டும். அவ்விலக்கியக் கழகங்களில் தமிழ்மொழிப்பற்றும் துணிவும் வாய்ந்த பல்துறை யறிஞர்களை ஒருங்கு கூட்டி, 'இலக்கிய ஆய்வுக்குழு' எனும் பல குழுக்களை அமைத்தல் வேண்டும். ஒவ்வொரு குழுவையும் தலைமையாகக் கொண்டு ஒவ்வொரு மாவட்டக் கழகமும், அனைத்து மாவட்டக் கழகங்களுக்கும், பொதுவாக ஒரு மாநிலக் கழகமும் அமைத்தல் வேண்டும்.

20: 3: ஆங்காங்கு உள்ள இலக்கிய நூலாசிரியர்களும், பிறதுறை நூலாசிரியர்களும் தாங்கள் எழுதுகின்ற நூல்களின் கைப்படியினை, அச்சிடுவதற்கு முன்பே, அந்தந்த இலக்கியக் கழகங்களில் உள்ள ஆய்வுக்குழுவிடம் ஒப்படைத்து, அக்கழகங்களின் சான்றிதழ் பெறுதல் வேண்டும். ஆய்வுக் குழுவினர், அந்நூல்களில் உள்ள கருத்துகளை எவ்வகையாலும் திருத்தவோ அடிக்கவோ செய்யாமல், அவற்றின் உயர்வு தாழ்வுகளை அந்நூலாசிரியர்களுக்கே விட்டு விட்டு, அவற்றில் உள்ள கலப்பு மொழி, சொற்பிழை, தொடர்ப்பிழை முதலிய மொழி, இலக்கணப் பிழைகளை மட்டும் சுட்டிக்காட்டித் திருத்தும்படி ஆசிரியர்களுக்கு அறிவுரை கூறுதல் வேண்டும்.

20: 4: இத்தகைய அறிவு முயற்சிக்காக நூலாசிரியரை, ஒரு நூலுக்கு இவ்வளவு என்று வரையறுக்கப்பெற்ற மிகக் குறைந்த தொகையொன்றினைக் கட்டணமாகவும் செலுத்தச் செய்யலாம். இல்லெனின், இலவசமாகவும் ஒரு தொண்டுணர்ச்சியாகச் செய்தும் கொடுக்கலாம். ஒரு மாவட்டத்தின் எந்த இலக்கியக் கழகத்திலும் தேர்வு பெற்ற-அல்லது சான்றிதழ்பெற்ற ஒவ்வொரு நூலுக்கும், மாநிலக் கழகம் மதிப்புரை அல்லது உயர்தரச் சான்றிதழ் அல்லது இரண்டும் வழங்கலாம். மாநில இலக்கியக் கழகத்தின் சான்றோ, மதிப்புரையோ பெறாத எந்த நூலும் அச்சிடத் தகுதியற்றன வென்றோ பள்ளி நூலகங்கள், பொது நூலகங்கள் முதலியவற்றில் வைக்கக் கூடாதன என்றோ அறிவித்து விடுதல் வேண்டும்.

20: 5: மேலும் அவ் விலக்கியக் கழகங்கள் ஆங்காங்கு இலக்கிய, இலக்கண வகுப்புகள் நடத்தி, அவ்வவ் வட்டார எழுத்தாளர்களைப் பயிற்றுவிக்கவும் செய்யலாம். இல்லெனின், இதற்கென ஓர் இலக்கியக் கல்லூரியே அரசுச் சார்பில் நடத்தலாம். எதற்கும் எல்லாரும் ஒருமுகப்பட்டு இணைந்து செயலாற்றினால் தவிர, நம் மொழியையும் வளர்ச்சியுறச் செய்ய முடியாது; இலக்கியத்தையும் வளர்த்துவிட முடியாது.

20: 6: எழுத்துரிமை என்னும் பெயரால் மொழித்தரத்தைக் குறைத்துத் தங்கள் மனம் போன போக்கில் எழுதிக் குவிக்கும் புன்மை நிலைகளை இந்த வகையிலன்றி வேறு எந்த வகையாலும் தடுக்க முடியாது. மேலும் இக்கால் திரைப்படங்களில் உள்ள காட்சிகளையும், கீழ்த்தரமான உரையாடல்களையும் தணிக்கை

செய்வதில்லையா? அக்கால் உரிமை என்னாகின்றது? மேலும் இலக்கியக் குழு அறிவுறுத்துவது, இலக்கியத்தில் உள்ள பிழைகளைத் திருத்திக் கொள்வதற்குத்தானே யன்றி, நூலின் கருத்துகளை மாற்றச் சொல்வதற்காக இல்லையென்பதை நாம் நன்கு எண்ணிப் பார்க்க வேண்டும்.

20: 7: இனி, கருத்து, மொழி இவையிரண்டிலும் சிறந்திலங்கும் இலக்கியங்களுக்கு அரசு முழுத்துணையாக இருந்து உதவுதல் வேண்டும். மாநில இலக்கியக் கழகம் மிகவுயர்வாகக் கூறுகின்ற இலக்கியங்களை அரசே தன் சார்பில் வெளியிட்டு உதவி, நூலாசிரியர்களை ஊக்குதல் வேண்டும். அத்தகைய நூலாசிரியர்களைப் பொது மன்றங்களும் அழைத்துப் பாராட்டிப் பொதுமக்களுக்கு அறிமுகப்படுத்தி வைத்தலைத் தங்கள் தலையாய தொண்டாகக் கருதுதல் வேண்டும். இவ் வழிமுறைகளைப் பின் பற்றுவோமானால், இன்னும் இருபது ஆண்டுகளில் தமிழ்மொழி வளர்ச்சியுறுவதுடன், தூய்மையுற்று விளங்கி, அதன்வழி இலக்கிய வாக்கமும் சிறந்திலங்கும் என்பதில் ஐயமே இல்லை.

20: 8: எவ்வாற்றானும் தமிழ் வளர்ச்சி என்பது மொழி வளர்ச்சியே! மொழி வளர்ச்சி என்பதில் அதன் தூய்மையைப் பேணுவதையே தலையாயதாகக் கொள்ளுதல் வேண்டும்; தூய்மையைக் கட்டழிக்கும் எந்த நிலையும் மொழி வளர்ச்சிக்கு ஊறு செய்வதே யாகும். சிலர் மொழித் தூய்மையை எள்ளல் செய்கின்றனர். சிலரோ பிறமொழிக்கலப்பால் மொழி வளரும் என்கின்றனர். அவர்கள் கலப்படக்காரர்களை யொத்த குற்றவாளிகளே! அவர்கள் இரு தரப்பினரும் தாய்மொழியைப் பற்றிக் கவலை யுறாதவர்களே! தாய்மொழியைப் பற்றிக் கவலையுறாதவர்கள் தாய்நாட்டைப் பற்றியும் கவலைப் படாதவர்களாகவே இருத்தல் வேண்டும். இனி, அவர்கள் பெற்ற தாயையும் கூடப் புறக்கணிப்பவராக விருக்கலாம். அத் தகவி லாதார் எந்த ஆக்க நிலையைப் பற்றியும் கவலையில்லாதவர் களே! எனவே அவர்களைப் பற்றி நாமும் கவலை கொள்ளத் தேவையில்லை.

21: 0: முடிவுரை:

21: 1: இதுகாறுங் கூறியவாற்றால், மொழியின்றி இலக்கியம் இயங்காது என்றும், நம் தமிழ் மொழிச் சிறப்பும் இலக்கியச் சிறப்பும் மிகவும் செழுமை வாய்ந்தன என்றும், இன வீழ்ச்சியால் மொழி

வீழ்ச்சியுறும் என்றும், மொழி வீழ்ச்சி இலக்கிய வீழ்ச்சியை ஏற்படுத்தும் என்றும், கலப்பு நிலையே மொழிச் சிதைவை உண்டாக்கி இலக்கிய வளர்ச்சிக்குக் கேடு செய்யும் என்றும், எனவே அது த்விர்க்கப் பெற்றாலொழிய மொழி வளர்ச்சியுறாது என்றும், மொழிக் கலப்புப் போன்றதே ஒலிக்கலப்பும் என்றும், அதுவும் தவிர்க்கப் பெறுதல் வேண்டும் என்றும், இலக்கிய வாக்கமும், மொழி வளர்ச்சியும் இணைந்து நடப்பவை என்றும், மொழியும் கருத்தும் இலக்கியத்தின் இரு கரைகள் என்றும், இலக்கியக் கட்டுக்கோப்பென்பது அதன் மொழி நடையும் கருத்தும் செறிந்திலங்குவதென்றும், இக்கால இலக்கியத்தின் இழிநிலை இன்னதென்றும், அந்நிலையில் ஒரு மாற்றம் எய்தி வருவது மனத்திற்கு ஆறுதலளிக்கின்ற தென்றும், இனி, எதிர் காலத்தில் தமிழ் வளர்ச்சியில் எத்தகைய அக்கறை காட்டப் பெறுதல் வேண்டுமென்றும் ஒருவாறு தெளிந்து கொண்டோம். இக்கருத்துரைகளே இத்துறையில் முடிபானவை அல்ல. நம் திறனுக்கும் முயற்சிக்கும் தக்கவாறு அவற்றை இன்னும் விளங்க அமைத்துக் கொண்டு, இவ்வகையில் மேலும் ஊக்கமாகவும் சிறப்பாகவும் செயலாற்றுதல் வேண்டும் என்று கேட்டுக் கொண்டு, இக்கருத்துரையை முடித்துக் கொள்கின்றேன்.

சிறப்புக் குறிப்பு:

இக்கட்டுரை படிக்கப் பெற்றவுடன், கருத்தரங்கத் தலைவராக வீற்றிருந்த பேராசிரியர் திரு. அ. ச. ஞானசம்பந்தனார் அவர்கள் மிகவும் மகிழ்ச்சியுடன் எழுந்து, "இக்கட்டுரை மிகவும் சிறப்பான கட்டுரை! (அவர் கூறிய சொற்கள்: மகா அற்புதமான கட்டுரை) பண்டாரகர்ப் பட்டத்திற்குரிய கட்டுரை போல் மிகவும் சிறப்பாக எழுதப்பெற்றுள்ளது. என் முப்பத்தைந்து ஆண்டுக்கால இலக்கிய வாழ்க்கையில் இதுபோன்ற தொரு சிறந்த கட்டுரையை நான் படித்தது மில்லை; கேட்டதுமில்லை. இக்கட்டுரையை எல்லாரும் கட்டாயம் படிக்கச் செய்தல் வேண்டும். 'ஒரு கட்டுரை யென்றால் எப்படியெப்படிப் பாகுபாடு செய்து எழுதுதல் வேண்டும்; என்னென்ன கருத்துகளை விளக்குதல் வேண்டும்' என்பதற்கு இக்கட்டுரை சிறந்த இலக்கணமாக இருக்கிறது. இதனை எழுதிய பெருஞ்சித்திரனார் அவர்களை மிகவும் பாராட்டுகின்றேன். அவர் எழுதிய இக்கட்டுரைக் கருத்துகளில் சில நம் கருத்துகளுக்கு மாறுபட்டு இருக்கலாம். ஆனால் அக்கருத்துகள் மிகச் செப்பமாகவும் தெளிவாகவும் கூறப் பெற்றுள்ளன. அவ்வளவு சிறப்பான(அற்புதமான) கட்டுரை. இக்கருத்தரங்கைக் கூட்டிய கரந்தைப் புலவர் கல்லூரித்தலைவருக்கு

ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன். இக்கட்டுரையைச் சிறு நூலாக அச்சிட்டு, இங்குப் படிக்க வருகின்ற புலவர் மாணவர் ஒவ்வொரு வருக்கும் கொடுத்துப் படிக்கச் செய்தல் வேண்டும். அப்பொழுதுதான் கட்டுரை எப்படி எழுதப் பெறுதல் வேண்டும் என்பது அவர்களுக்குத் தெளிவாக விளங்கும். இவ்வேண்டுகோளைக் கட்டாயம் செயற்படுத்து மாறு கல்லூரித் தலைவரை நான் கேட்டுக் கொள்கின்றேன்'' —என்று மனம் விட்டுப் பாராட்டி அமைந்தார்கள். அவர் கருத்துப் படியே இக்கட்டுரை தென்மொழி வெளியீடாக 75 காசு விலையில் முன்னுரையுடன் வெளியிடப் பெற்றுள்ளது என்பதை அன்பர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றோம். (ஆ-ர்)

பிழைக் குறிப்பு.

இக்கட்டுரையின் முதல் பத்தியில் (I: 1.) 5-ஆம் வரியில் சுவறிக்கொள்ளாத என்பதற்கு மாறுகச் சுவரிக் கொள்ளாத என்று தவருகச் சில படிகளில் அச்சாகியுள்ளது. திருத்திப் படித்துக் கொள்க.

'தமிழம்'

(திங்களிதழ்)

ஆசிரியர்: உலக முதல்வி

0 தென்மொழி யணியில் சிறப்புடன் வெளிவந்து கொண்டுள்ளது!

தனியிதழ் 50 காசு ஆண்டுக்கட்டணம் 6 உருபா

இன்றே உறுப்பினர் ஆகுங்கள்

'தமிழம்', 17, நாகப்ப முதலி தெரு, சென்னை-2.

'தென்மொழி'

கடலூர்-1

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.

ஒவ்வொரு தமிழ்த்திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக்கட்டணம்:	9 உருபா.	10-50உருபா	14உருபா
அரையாண்டுக்கட்டணம்:	5உருபா	6 உருபா.	7-50
தனியிதழ்:	75காசு	90 காசு	1-10

ஓரிதழுக்கு உரு. 1-50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக்கேட்க.

'தென்மொழி'யன்பர்களுக்கு

ஒரு நற்செய்தி!

(தீச்சுடரில் வெளிவந்த அறிக்கையுடன் மேலும் சில திருத்தங்கள் சேர்க்கப் பெற்றுள்ளன)

1 தென்மொழி இடையீடாக இரண்டு மாதங்களுக்கு நிறுத்தி வைக்கப்பெறுவதாகத் 'தீச்சுடரில்' அறிக்கை வெளியிட்டுள்ளேன். ஆனால் சிறப்பு முறையில் தென்மொழி வெளிவருமுன் பழைய முறையிலேயே ஒருசில இதழ்கள் வரலாம் எனக் கருதி, இக்கால்— தென்மொழியை வெளியிட்டுள்ளேன்.

2 விரைவில் தென்மொழி திருச்சியிலிருந்தே வர ஏற்பாடுகள் செய்யப்பெற்று வருகின்றன.

3 தென்மொழி அடுத்து வெளிவருகின்றபொழுது இப்பொழுது வந்துகொண்டுள்ளதைப்போல் பதின்மடங்குச் சிறப்பும் மும்மடங்கு விற்பனையும் கொண்டு வருவதுடன், தமிழகத்தின் எல்லா ஊர்களிலும் எல்லாக் கடைகளிலும் இப்பொழுது குமுதம், ஆனந்த விகடன் போலும் தமிழ்க்கொல்லியிதழ்கள் கிடைப்பதைப் போல்— தவறாமல் மாதா மாதம் கிடைக்கும்.

4 அட்டைப் படமும் அந்த இதழ்களைப் போல் மூவண்ணங்களிலும் வழவழப்புத்தாளிலும் அச்சிடப்பெறும். ஒவ்வோரிதழிலும் அட்டைப் படம் மாற்றப் பெறும். உள்ளேயும் படங்கள் நிறைந்திருக்கும். ஒவ்வோரிதழிலும் கருத்துப் படங்களும் புதுமைச் செய்திகளும் நிறைந்து விளங்கும்.

5 தூய எளிய தமிழில் கதைகள், கட்டுரைகள், துணுக்குச் செய்திகள், வாழ்வியல் கருத்துகள் முதலியவை தவறாமல் இடம் பெறும். எனவே, பொழுது போக்குவாருக்கும், எடை நிறுப்பாருக்கும்கூட இஃது ஒரு தக்க இதழாக விருக்கும்.

6 இனி வரும் தென்மொழி தாளைப் பொறுத்த மட்டில் இரண்டு தரங்களில் அச்சிடப் பெறும். ஒருவகை உயர்ந்த வெள்ளைத் தாளில்- இப்பொழுது அச்சிடுவதைப் போல் — அச்சிட்டு வெளிவரும். இன்னொரு வகை செய்தித்தாள் அச்சிடும் (News Print) தாளில் அச்சிட்டு, விலை குறைத்து விற்கப்பெறும்.

7 உயர்ந்த வெள்ளைத்தாள் பதிப்பின் ஆண்டுக் கட்டணம் பன்னிரண்டு உருபாவாகவும், தனியிதழ் ஓர் உருபாவாகவும். தாழ்ந்த மங்கல்நிறத் தாள் பதிப்பின் ஆண்டுக் கட்டணம் ஏழரை உருபா வாகவும், தனியிதழ் அறுபது காசாகவும் இருக்கும். மற்றப்படி அட்டைப் படம், செய்திகள், பக்கங்கள் யாவும் ஒன்றே!

8 புதுப் பொலிவோடு வெளிவரும் தென்மொழியின் பக்கங்கள் எண்பதாக இருக்கும்.

9 'தென்மொழி என்பது ஓரிதழன்று; ஓரியக்கம்' என்பது எவரும் அறிந்ததே! இனி தென்மொழியின புது அமைப்பு தமிழக விடுதலை வரலாற்றில் இரண்டாம்படிநிலை முயற்சியாக இருக்கும் என்பது எவரும் அறிய வேண்டிய ஒன்றாக விருக்கும் !

10 எந்தமிழை உலகுக் கறிவிக்கவும், ஆரியத்தை அறவே வெட்டிப் புதைக்கவும், போலியரசியல் கூத்தாட்டங்களைத் தீயிட்டுப் பொசுக் கவும் இனிவரும் தென்மொழியின் புதிய வரலாற்று முயற்சி முழு முனைப்பாக உயர்ந்து செயல்படும்.

11 தென்மொழியின் புதிய வரலாற்றுத் தொடக்கத்தின் பின், தென்மொழியணியில் அதன் தோளொடு தோள் நின்று போராடும் அனைத்துத் தனித்தமிழ் இதழ்களும் மேலும் வலுப்படுத்தப் பெறும்.

12 தென்மொழிக்கு எவர்மேலும் வெறுப்பில்லை; கசப்பில்லை; பொறாமையில்லை; பகையில்லை. எனவே, தனித் தமிழ்க்குப் பாடுபடும் அனைத்து இதழ்களையும், அனைத்துத் தொண்டர்களையும் என்றும் இறுகத் தழுவிக் கொண்டு இத் தலைமுறையிலேயே இன முன் னேற்றம் காணத் தென்மொழி மேலும் மேலும் பல புதிய முனைப் புடன் முயற்சி செய்யும்; வெற்றியும் பெறும்.

13 தென்மொழி சிறப்பு வெளியீட்டுத் தொடர்பாக நான் விரைவில் தென்னாடு முழுவதும் ஒரு சுற்றுச் செலவு மேற்கொள்ளலாம் என்று இருக்கின்றேன். அது தொடர்பாக, தென்மொழியின் கொள்கை, செயலாண்மை, விரிவாக்கம் முதலியவற்றில் நம்பிக்கையும் அக்கறை -யும் ஈடுபாடும் கொண்ட அன்பர்கள் எனக்கு உடனே எழுதி அவரவர் பகுதிகளுக்கு நான் வருவதற்கான ஏற்பாடுகளைச் செய்கின்ற வகையில் என்னொடு தொடர்பு கொள்ளக் கேட்டுக்

கொள்கின்றேன். வரலாற்றைப் புதுப்பிக்கும் இம் முயற்சியில் அன்பர்கள் சோம்பலும் சுணக்கமும் இன்றி உடனடியாக ஈடுபட வேண்டிக் கொள்கின்றேன். உங்கள் ஈடுபாட்டின் விரைவே தென்மொழியின் விரிவாக்க ஏற்பாடுகளை விரைந்து செய்ய உதவும் என்பதையும் தெரிவித்துக் கொள்ள விரும்புகின்றேன்.

14 இவ்வகையில் தென்மொழியைப் புரக்கவும் கட்டிக்காக்கவும் விரும்புகின்றவர்கள் பொருளால், வினையால், கருத்தால் தம்தம் நிலைகளுக்கு ஏற்ப எனக்கு எவ்வெவ்வகையில் துணை நிற்க முடியுமோ அவ்வகைகளை எனக்கு மடல்கள் வழி அறிவிக்கவும் வேண்டிக் கொள்கின்றேன். இஃது என் தனி முயற்சியென்று கருதாமல் எல்லாரும் ஒன்றிணைந்து இயங்கும் முயற்சி என்றும் உறுதியாக எண்ணிக் கொள்ளவும் வேண்டுகின்றேன். அன்பர்களின் பொருளுதவி தென்மொழி விரிவாக்கத் திட்டத்தில் பங்கீடாகவே வரவு வைத்துக் கொள்ளப் பெறும். இவ்வகையில், இரண்டாண்டுகளுக்கு முன் திருச்சியில் கூட்டிய தென்மொழி விரிவாக்கத் திட்டக் கூட்டத்தில் கலந்து கொண்டு உறுதியளித்த அன்பர்களும் ஈடுபாடு கொண்டு கருத்துச் செலுத்தலாம் என்பதையும் கூறிக்கொள்ள விரும்புகின்றேன்.

15 தென்மொழித் தொடர்பாக மேலும் நான் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பழைய தென்மொழி முகவரிக்கே அன்பர்கள் சுருக்கமாகவும் தெளிவாகவும் தெரிவிக்கக் கேட்டுக் கொள்கின்றேன்.

கடலூர்-1
1-7-73

அன்பன்,
பெருஞ்சித்திரன்

"வலம்புரி"

ஆசிரியர்: **புலவர் இறைக்குருவனார்**

0 தமிழுக்கு ஆக்கமும் தமிழர்க்கு ஊக்கமும் அளிக்கும் செந்தமிழ்த் திங்களிரிதழ். தனியிதழ் 0-25 காசு

ஆண்டுக்கட்டணம் 6 உருபா, அரையாண்டுக் கட்டணம் 3 உருபா

விற்பனையாளர்கள் தொடர்பு கொள்க.

வலம்புரி மதுரை-10.

இளைஞர்களின் இக்காலத் தவறான பாலியல் போக்குகளுக்கு அவர்களிடம் 'மானவுணர்வு' இல்லாதிருப்பதே காரணியமாகும்!

சோவியத்து உளவியலறிஞர்
திருவாட்டி. பர். இலிதியா போக்தனோவிச்சு

(வளர்ந்துவரும் நாகரிக உலகில் அமெரிக்க நாகரிகம் எவ்வளவு போலியானது; உருசிய நாகரிகம் எவ்வளவு உயர்வானது என்பதை இளைஞர் குமுகாயத்தை வைத்துப் படம் பிடித்துக் காட்டுகிறார் கட்டுரையாசிரியர். தமிழ்ப் பண்பாட்டியல் அமைப்பை விளக்குவதைப் போலவே இருக்கிறது இக்கட்டுரை. படித்துப்பாருங்கள்!)

பாலுறவு குறித்த உரையாடலைப் பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளின் முன்னர் தவிர்த்து விடுவதை நாம் காண்கிறோம். ஆனால், குழந்தைகள் பக்குவமடையும் காலத்திற்கு அவர்களை நாம் அணியப் படுத்த வேண்டும் என்றே நான் கருதுகிறேன். தனி மாந்தருக்கும் சரி, குமுகாயத்திற்கும் சரி இந்தச் சிக்கல் பெரும் மூகாமை வாய்ந்தது என்பதை எவரும் மறுப்பதில்லை. இருந்த போதிலும் கூட, பாலுறவு பற்றிய செய்திகளைக் குழந்தைகள் தங்கள் நண்பர்களிடமிருந்தே தெரிந்து கொள்ளட்டும் என்று நாம விட்டு விடுகிறோம்; அதற்கு மாற்று வழி, அவர்கள் அறிவியல் முறையி லான செய்திகளைத் தங்கள் பெற்றோர்களிடமிருந்தோ, ஆசிரியர் களிடம் இருந்தோ, மருத்துவர்களிடமிருந்தோ தெரிந்து கொள்ளச் செய்வதுதான்.

பாலுணர்வு என்பது பிறவியிலிருந்தே இயற்கையளித்த ஒரு வகை அறிவு என்றும் அது பற்றிக் கற்றுக் கொடுக்க வேண்டியது ஏதுமில்லை என்றும் பலர் கருதுகின்றனர். காலம் வரும்போது, ஒரு குழந்தை தானாகவே செயதிகளைத் தெரிந்து கொள்ளும் என்று கூறுகின்றனர். இந்தக் கருத்துத் தவறில்லை என்றாலும், பாதியளவே உண்மையாகும். எல்லாப் பெற்றோர்களுக்கும், அதிலும் குறிப்பாக மருத்துவர்களுக்கும், பையன்களும், பெண்களும் உடல் பக்குவ மடையும் காலத்தில் ஏற்படும் மாற்றங்களினால் எத்தகைய உள

உடல் இன்னல்களுக்கு ஆளாகின்றனர் என்பது தெரியும். நாளமில் சுரப்பு அமைப்பு-குறிப்பாகப் பாலினச் சுரப்பிகள்-விரைவாக வளர்ச்சி யடைகின்றன. வாழ்வின் அந்தப் பருவத்தில் உணர்ச்சி வயப்படும் தன்மை மிகுகிறது. ஆண் பெண் உறவுகள் தொடர்பான எந்தச் சிறிய செய்தியிலும் அவர்கள் பெரும் ஈடுபாடு காட்டத் தொடங்கு கின்றனர். தங்களது தோற்றத்திலும், உரிமை உணர்விலும் அப்பருவ இளைஞர்கள் பெருங்கவனம் செலுத்துகின்றனர் அந்தப் பருவத்தில் அவர்கள் செய்யும் செயல்கள் மட்டுமே அவர்களுக்கு முகாமை யானவையாக உள்ளன; விளைவுகளைப்பற்றி அவர்கள் எண்ணுவதில்லை; அவர்களது ஆய்வு மனம் வேலை செய்வதில்லை; பட்டறிவோ அந்தக் காலத்தில் அவர்களுக்குச் சுழியம்! பதின்பருவ (Teen-age) ஆணும், பெண்ணும வளர்ச்சியடையத் துடிக்கும் ஒரு குழந்தை என்றே கூறலாம்.

இத்தகைய காலக்கட்டத்தில்தான், "உரிமைக் காதல்" (கட்டவிழ்ந்த காதல்) மெய்ப்பாடு இளைஞர்களுக்குப் பல கேடுகளை ஏற்படுத்தி விடுகிறது. அந்த மெய்ப்பாட்டைக் கேட்கும் போதே எனக்கு உளக்கொதிப்பு ஏற்படுகிறது. ஒழுங்கு முறைகளிலும் உடலியல் முறைகளிலும் நன்கு வளர்ச்சியுறாத இளைஞர்கள், அத் தகைய மெய்ப்பாட்டினால் சீரழிந்து விடுகிறார்கள். 'உரிமைக் காதல்' என்று பேசப்படுகிறதே, எதிலிருந்து விடுதலை பெற்றது அது? விரும்பப்படும் ஒருவருக்கோ, அல்லது விரும்பும் ஒருவருக்கோ உள்ள பொறுப்புகள், கடமைகள் ஆகிய அனைத்திலிருந்தும் தானே விடுதலை பெற்றது அத்தகைய காதல். 'உரிமைக் காதல்' மெய்ப்பாடு கடைப் பிடிக்கப்படும் நாடுகளில் எல்லாம், கருச்சிதைவு எண்ணிக்கைதான் மிகுந்து வருகிறது; அல்லது பாலுறவு நோயும், குற்றங்களும், வெறி மயக்கப் பொருள் பயன்படுத்தமும் பெருகி வருகிறது. இத்தகைய தவறான மெய்ப்பாட்டை நிகரமைக் கோட்பாட்டு அரசு ஏற்றுக் கொள்ள முடியாது. அது சோவியத்து வாழ்க்கை முறைக்கே முரண் பட்டது. அண்மையில் பாலுறவுக் கல்விச் சிக்கல்களைத் தீர்ப்பதற் கென்று மாசுக்கோவில் ஓர் ஆராய்ச்சிக் கூடம் திறக்கப்பட்டுள்ளது. இது நல்ல ஒரு முயற்சியே எனினும், பல பெற்றோர்கள்,எக்காளமாக, இந்த ஆராய்ச்சிக் கூடம் எதைச் செய்துகாட்டப் போகிறது என்று கேட்கின்றனர். இதன் நோக்கம் இதுதான்; அண்மைக் காலம்வரை மிப்பணிவுடனும், நலலவனாகவும் இருந்த ஒரு பையனை, பெண்ணை,

உடல் பக்குவமடையும் காலத்துப் பணிவற்றவனுகவும், அடக்க முடியாதவனுகவும் ஆகி விட்டால், அத்தகைய குழந்தைகளின் பெற்ருேர் இவ்வாராய்ச்சிக் கூடத்தின் உதவியினை நாடலாம்.

பாலினக் கல்வியில் முகாமையானதொரு கடமை, இளைஞர் களிடையே 'மானம்' என்ற உணர்வை வளர்ப்பதாகும். இந்த உணர்வு, காலங்காலமாக நம்மிடம் உள்ளார்ந்திருப்பதுதான் எனினும், அந்தந்தக் காலத்திற்கும், சூழ்நிலைக்கும் ஏற்றவாறு அந்தக் கருத்தின் பொருள் சற்று வேறுபடுகிறது. 'மானஉணர்வு' என்பது மாந்தனின் இயற்கையான ஓர் உணர்வுதான். காதல் அல்லது அன்பு என்பது நமது மான உணர்வைக் கூர்மைப் படுத்துகிறது; மனத்தின் தற்காப்பு உணர்வைப் போல, மான உணர்வு நமது பாலுணர்வை ஒழுங்குபடுத்துகிறது. பதின்பருவ (Teen-age) இளைஞர்கள் தங்களின் உணர்ச்சிக் கொந்தளிப்புகளை அடக்கியாள வேண்டுமெனில் அவர் களிடம் மான உணர்வை வளர்ப்பதற்கு நாம் உதவ வேண்டும்.

மாந்த இயற்கை பற்றிய சிறந்த ஆய்வாளரான இசுடெந்தால், மான உணர்வை, 'காதலின் தாய்' என்று கூறுகிருர். அது காதலை மேலும் விரைவுப்படுத்தி, வளர்க்கிறது. தவிர, கற்புநிலை யுடனும் அது நெருங்கிய தொடர்பு கொண்டது. கற்பு என்பது காலங்கடந்த கருத்து என்று சிலர் கூறுவதும் கண்டிக்கத் தக்கது. "என்றும் நிலையான மகிழ்ச்சியைத் தரும் மெய்யான காதலின் அசைவுருத அடிவாரம் கற்பு நிலையே" என்று சுவிட்சர்லாந்து உளவியலாளரான அகத்து போரல் கூறுகிருர். ஒருவரின் உளநெறியையும் உடல் நலத்தையும் காக்கக் கற்பு நிலை பெரிதும் உதவுகிறது என்று உருசிய அறிஞரான பர். விளாதீமிர் பெக்தரேவ் கூறுகிருர்.

இளம் அகவையில் பாலுறவுகளில் ஈடுபடுவது, ஈடு செய்ய முடியாத தீமைகளைப் பயக்கிறது என்று உளவியலாளர்கள் கருது கின்றனர். உடலுக்கும், உள்ளத்திற்கும் அது பெருங்கேடு விளை விக்கும் என்பது ஏ. ஐ. சிகோர்சுக்கியின் கருத்து. மிக இளமைப் பருவத்தில் ஆண் பெண் உறவுகளில் ஈடுபடாதவர்கள், முதுமைக் காலத்திலும்கூட தங்களின் இல்லற வாழ்க்கையை இனி

தாகக் கழிக்க முடியும். ஆனால், சிறு அகவையிலிருந்தே பாலுறவு களில் திளைத்தவர்கள் விரைவில் தங்களது ஆற்றலையும், வலிமை யையும் இழந்து, அலி நிலையை அடைந்து விடுகின்றனர்.

'காதலிருவர் கருத்தொருமித்து ஆதரவு பட்டதே இன்பம்' என்பது முதுமொழி. கருத்து ஒருமைப்பாடு, மாறுபட்ட கருத்துக்கு மதிப்பளித்தல், நீக்குப் போக்குடன் கூடிய உள்ளம் ஆகிய பலவும் காதலர்களுக்குத் தேவையானவை. இத்தகைய உளப் பக்குவம் இளைஞர்களுக்கு ஏற்பட்டிருக்க முடியாது. அதனால்தான் இளம் அகவையில் திருமணங்கள் நடைபெறுவது தவிர்க்கப்படல் வேண்டும்.

ஒரு குமுகாயத்தின் ஒட்டு உறவுகள் நிறைவளிக்கக் கூடியனவாக இருக்க வேண்டுமெனில்-திருமண வாழ்வு அதற்குரிய புனிதத் தன்மையோடு திகழ வேண்டுமெனில் ஒவ்வோர் இளைஞரையும்—ஆணாயினும், பெண்ணாயினும், சிறு அகவையிலிருந்தே அக்கறையுடனும், கவனமாக வும், வளர்க்க வேண்டும். பெண்களுக்கு மதிப்பும், வணக்கமும் அளிக்குமாறு ஆண்கள் வளர்க்கப்பட வேண்டும்; இருபாலாரிடையேயும் கற்பு நிலையைப் போற்றும் உணர்வு பெருக வேண்டும். உணர்ச்சிக் கட்டுப்பாடும், பொறுப்புணர்வும் அவர்களுக்கு வாலைப் பருவத்தில் ஏற்படுமாறு செய்ய வேண்டும். O

தீச்சுடர்

சிறப்பாசிரியர் : பாவலர் பெருஞ்சித்திரனார்
ஆசிரியர்: க. வெ. நெடுஞ்சேரலாதன்
தனியிதழ் 00-25 ஆண்டுக் கட்டணம் 3 00
தொடர்புக்கு: தீச்சுடர், திங்களிதழ், மதுரை-10

வேந்தம்

(திங்களிரிதழ்)
இன்றே உறுப்பினர் ஆகுங்கள் !
தனியிதழ்: 30 காசு ஆண்டுக்கட்டணம் 6 உருபா
தொடர்புக்கு: இயக்குநர், வேந்தம் நிறுவனம், தரங்கம்பாடி.

0: 173: பர். மு. வரதராசனாரின் தமிழ் மொழிப்பற்று

பேரன்புடைய ஐயா!

வணக்கம். பர். மு. வரதராசனாரைத் துணைக்கண்காணகராகக் கொண்டியங்கி வருகின்ற, மதுரைப் பல்கலைக்கழகப் பதிவாளர், 31—3—73-ஆம் பக்கலிட்ட 'தினமணி'ச் சென்னைப் பதிப்பு ஐந்தாம் பக்கத்தில் தேர்வு நடுவங்கட்கான விளத்தப் பட்டியலினை வெளியிட்டிருந்தார். அப்பட்டியலில் பயன்படுத்தப் பெற்ற சொற்கள் அனைத்தும் ஆங்கிலமே. ஆங்கிலத்தை ஒலிப்பெயர்ப்புச் செய்து, அப்படியே தமிழில் வெளியிட்டுள்ளனர். காட்டுக்காகச் சிலவற்றை மட்டும் ஈண்டுக் குறிக்கின்றேன்.

ரிஜிஸ்திரார், பிரி-யூனிவர்ஸிடி, கரஸ்பாண்டன்ஸ் கோர்ஸ், ஸெமஸ்டர், சென்டர், ரெகுலர், பிரைவேட், மானேஜ்மண்ட் ஸ்டடீஸ், கெமிஸ்டிரி, சோஷியல் ஒர்க்ஸ் இன்ஸ்டிடியூட், சோஷல் ஓர்க், சர்ட்டிபிகேட், ஹால் டிக்கெட்.

இவைதாம் தமிழ்ப்பேராசிரியர் ஒருவரைத் துணைக் கண்காணகராகக் கொண்டுள்ளதால் தமிழர்களாகிய நாம் பெறும் பயன் (!) போலும். இவருக்கோ அல்லது இவரின் கீழ்ச் செயல்படும் அதிகாரிகளுக்கோ தனித்தமிழ் எழுதத் தெரியவில்லையென்றால், நம் மொழிஞாயிறு பாவாணர் ஐயா அவர்களிடம் அறிவுரை பெற்று வெளியிட்டிருக்கலாம். அதற்கு மனமில்லையெனின் ஆங்கிலத்திலேயே எழுதித் தொலைத்திருக்கலாம்.

ஏன்தான் இவ்வாறு கங்கணங் கட்டிக்கொண்டு, நம் தாய்த் தமிழின் சீரிளமைக்கு ஊறுபயக்கத் துடிதுடிக்கும் ஆரியப்பார்ப்பனப் பேய்கட்குத் துணை நிற்கின்றனரோ? இப் பெருந்தகை நல்லன பல செய்ய இயலவில்லை யெனினுங்கூட, தமிழுக்கு மாறான இவை போன்ற செயல்களையேனும் செய்யாமலிருக்கலாமே!

இது குறித்து, திரு. பர். மு. வரதராசனுர்க்கும், தமிழ்நாட்டரசு, தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநருக்கும், இக் குறைபாட்டைச் சுட்டி விளக்கம் கேட்டுள்ளேன். என்ன எழுதுவரோ? பார்ப்போம்.

—நா. எழில்-மகிழ்நன்-முதனை.

O: 179: தமிழ்நாட்டமைச்சரின் தமிழ் நாட்டம்!

தமிழாட்சி மொழியாக-பயிற்றுமொழியாக வழக்கு மன்ற மொழியாக-வேண்டுமென விழையும், தமிழ்நெஞ்சங்கட்கு 14-2-73 அன்று 'அலையோசை' முதற்பக்கச் செய்தியைப் படைக்கிறேன்.

'சைதாப்பேட்டை நயமன்றத்தில் சான்று சொன்ன அமைச்சர் ஆதித்தன், தமிழில் சான்று சொல்ல முடியாது என்று மறுத்து ஆங்கிலத்தில் சான்று அளித்தார்'

'தமிழில் சான்று கூறினுல் சரியான சட்டச் சொற்களைப் பயன்படுத்த முடியாது என்றும், சட்ட நுணுக்கம் கெட்டுவிடும்' என்றும் ஆதித்தன் விடை கூறினுர்.'

'வழக்கறிஞர் தூய தமிழில் (தூய தமிழுக்கு அவர்கள் இலக்கணம் என்னவோ?) கேட்ட கேள்விகளுக்கு ஆதித்தன் முழுக்க முழுக்க ஆங்கிலத்திலேயே விடையளித்தார்'

தாம் தமிழரான அமைச்சரே இவ்வாறு கூறியது சட்டப்படிப்பு முற்றியதன் விளைவா? அமைச்சர் கூற்று இவ்வாருயின் தமிழ்ப் பகைவர்கள் கிடக்கட்டும்; தமிழை அடியடியாகப் பயன் படுத்தும் கடிவாள அலுவலர்கள் என்ன நினைப்பர்; என் செய்வரோ ?

—தெ. துரைராசு திருவாரூர்.

O 180: மீண்டும் ம. பொ. சி. சமற்கிருதத்திற்கு வால் பிடிக்கிருர்!

தண்டமிழ்ப் பாவல! வணக்கம்.

சென்ற 10—3—73 ஆம் நாள் தஞ்சையைச் சேர்ந்த கரந்தைத் தமிழ்ச் சங்கத்தின் 'இளங்கோவடிகள் தமிழ்க்கழக'த்தின் 34-ஆம் ஆண்டு விழாவில் திரு ம. பொ. சி. அவர்கள் கீழ்க்காணுமாறு பேசினுர். அவ்வமயம் பண்டாரகர் மெ. சுந்தரனுரும் அருகிருந்தனர்.

"இந்து மதத்தைப் பரப்பிய சங்கரர், மத்துவர், இராமானுசர் ஆகியோர் அனைவரும் தென்னகத்தில் தோன்றியவர்களே! (நல்ல வேளையாக இந்துமதமே தென்னகத்தில்தான் தோன்றியது எனக் கூறுது விடுத்தார்!) இவர்கள் வடநாடு சென்று இந்து மதத்தைப் பரப்பியபோது மதக் கோட்பாடுகளை எம்மொழியில் விளக்கியிருக்கக் கூடும் என்றும், அறிஞர்களோடு இந்து மதத்தைப்பற்றி எம்மொழி யில் தருக்கமிட்டிருக்கக்கூடும் என்றும் நீங்கள் நினைக்கிறீர்கள்? தமிழிலா? இல்லை. இந்தியிலா? இல்லை. உருதுவிலா? இல்லை. பின் எம்மொழியில்தான் என்றால், வடமொழியில்தான். ஒரு மதத்தின் தலைவர்கள் தங்கள் மதக்கோட்பாடுகளை – கருத்துக்களைப்பற்றி அறிஞர்களுக்கு விளக்கி அவர்களோடு தருக்கமிடும் அளவிற்கு ஒரு மொழி வளம் பெற்றிருந்த தென்றால், அம்மொழி ஒரு சிறந்த மொழியாகத்தானே இருந்திருக்க வேண்டும்? ஆகையால் சமசுக்கிருதத்தின் மேல் நாம் வெறுப்புக்கொள்ளத் தேவையில்லை. அதுவும் ஒரு சிறந்த மொழியே" என்றார்.

மேலும் அவர் "எந்த அளவுக்கு நான் ஒரு தமிழன் என்பதில் பெருமைப்படுகின்றேனோ, அதே அளவு என்னை ஓர் இந்தியன் என்று கூறிக் கொள்வதிலும் நான் பெருமை அடைகிறேன்" என்றார்.

சமசுக்கிருதம் இன்றுள்ள நிலைக்காளானதற்கு அவர் கூறும் கரணியம், 'இன்றைய நிலையில் கூட ஆங்கிலமும், தமிழும் பேச்சு வழக்கிலும், எழுத்து வழக்கிலும் நிரம்ப வேறுபாடுடையனவாக உள்ளன. அவ்வாறே வடமொழியும் பல குறைகளை இந்நாளில் உடையதாயினும் அஃது ஒரு மேம்பட்ட மொழியே' என்றார்.

திரு. தமிழமல்லன் கூறியது போன்று ம. பொ. சிக்கு இனி "இந்தியவிரைவு" நாளிதழில் மட்டுமன்று, அனைத்துப் பார்ப்பன ஏடுகளிலும் நல்ல விளம்பரம் கிடைக்கும். அது கண்டு நம்மில் எவரும் வியப்புற வேண்டா. —நிறையின்பன், தஞ்சை.

0: 181: அவர்களை மேலும் அஞ்சச் செய்வோம்!

தாங்களும் ஏனைய விடுதலை மறவர்களும் விடுவிக்கப் பெற்ற செய்தி என்னிடத்தில் எவ்வகை மகிழ்வையும் ஏற்படுத்த வில்லை. ஏனெனில் நாம் இன்னும் உண்மையாக விடுவிக்கப் பெறவில்லை.

சிறைக்குள்ளே அடைந்து கிடப்பதும் இன்றைய தமிழ் நாட்டிலே வாழ்வதும் ஒன்றே. தென்மொழி விரைவில் திருச்சிக்கு மாற்றப் பெறும் செய்தியறிந்து பெரு மகிழ்வு எய்துகிறேன். திருச்சி, தமிழ் நாட்டின் நடுவிலுள்ள பெரிய நகரம். தென்மொழி அலுவலகம் அங்கு அமைவது எல்லா ஏந்துகட்கும் வாய்ப்பாக இருக்கும். எனவே விரைவில் தென்மொழியைத் திருச்சிக்குக் கொண்டு வர முயல வேண்டுகிறேன். 'தீச்சுடர்' இதழில் தாங்கள் அறிவித்துள்ள வண்ணம் தென்மொழியில் மாற்றங்கள் தேவையே. அத்தகைய மாற்றங்களோடு தென்மொழி நடையிட்டால்தான் தமிழ் நாட்டின் இன்றையப் போக்கை நாம் தாக்குப் பிடிக்க இயலும்.

தனித்தமிழால் 'இதை'த்தான் செய்ய முடியும் என்று சிலர் கருதிக் கொண்டிருக்கின்றனர். அந்தக் கருத்தைத் தகர்த்துத் தனித்தமிழால் 'எதை'யும் செய்ய முடியும் என்ற உண்மையை உணர்த்த இனி வரும் தென்மொழி பணி செய்ய வேண்டும். இலக்கியத் திறனுய்வு மட்டுமின்றித் திரைப்படத் திறனுய்வுப் பகுதியையும் தென்மொழி தாங்கி வருதல் வேண்டும். திரைப்படத் துறையை நாம் இழிவென்று எண்ணி விட்டு விடக் கூடாது. அரசியற் சேற்றைத் தூர் வாரித் துயரப்படுகின்ற நாம் திரைப்படக் கொட்டிலையும் தூய்மைப் படுத்த முயல்வோம். எங்கெங்கெல்லாம் நாம் நுழைய முடியுமோ அங்கங்கெல்லாம் நுழைந்து வெளி வருவோம். துறைதோறும் துறைதோறும் துடித்தெழுந்து தமிழுக்குத் தொண்டு செய்வோம்.

தென்மொழியின் அட்டைப் படம் காண்போர் கண்ணையும் கருத்தையும் கவருமாறு இருத்தல் வேண்டும். இதுவரை பெரும் பாலும் பூணூல் 'சாமி' யார்களின் படங்களையே அட்டையில் தாங்கி வந்த 'கல்கி' இன்று காலத்திற்கேற்றவாறு தன்னை மாற்றிக் கொண்டு 'குமுதம்' பாணியில் கன்னியரின் கவர்ச்சிப் படங்களை வெளியிடத் தொடங்கியுள்ளது. அப்படியிருக்க நாம் கண்ணியமான முறையில் கலை உணர்ச்சியுள்ள படங்களை வெளிபிடுவதில் தவறில்லை.

மதுரையில் மாநாட்டுத் தொடர்பான நிகழ்ச்சிகள் நம் இயக்கத் திற்கு ஓரளவு நல்ல விளம்பரத்தைக் கொடுத்திருக்கின்றன. இன்றைய நிலையில் விளம்பரமும் நமக்குத் தேவையே. காமராசர்

பேராய நாளிதழான 'நவசக்தி' நம்மை விளங்கிக் கொண்டு நம் இயக்கத்தை எதிர்த்து ஆசிரியவுரை எழுதியுள்ளதைத் தங்கள் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். அந்த ஆசிரிய வுரையைப் படிக்கும் போது 'நவசக்தி' கூட்டங்கள் நம்மைத் தொடக்கத்திலிருந்தே நன்றாக கூர்ந்து கவனித்து வந்திருக்கின்றன என்பது புலனாகிறது. 'குமுதம்' இதழில் (ஆபீசுப் பையன்) கிண்டல் பகுதியில் நம் இயக்கத்தின மதுரை மாநாட்டுத் தொடர்பான உரையாடல் கலக்கப் பெற்றுள்ளது. இவற்றை யெல்லாம் கூட்டிக் கழித்துப் பார்க்கும் போது எதிரிகள் நம்மைக் கண்டு அஞ்சத் தொடங்கியிருக்கிறார்கள் என்பது தெள்ளத் தெளி வாகத் தெரிய வருகிறது. அவர்களுடைய அச்சத்தை நாம மேலும் மேலும் வளர்க்க வேண்டும்.

எனவே தமிழக விடுதலை இயக்கம் இனி முனைந்து செயல்பட வேண்டும். ஆண்டுக்கு ஒரு முறையோ இருமுறையோ மாநாடு நடத்துவதற்கு மட்டும் நாம் கூடக் கூடாது போராட்டக் காலத்தில் நாம களத்திலே நுழையும் போது நம் அமைப்பு கட்டுக் கோப் போடு இருக்க வேண்டும. விழித்து விட்ட தமிழர்களைக் கண்டு வீணர்கள் அஞ்சுகின்றனர். இனி அவர்கள் எஞ்சியுள்ள தமிழர்களையாவது தூக்கத்திலேயே வைத்திருக்கலாம் என விரைந்து செயல்படுவர். எனவே நாம இனி மிக விழிப்போடு இருக்க வேண்டும்.

தூங்கும் தமிழர்களைப் பறைகொட்டி எழுப்ப முயல்வோம். அதற்கும் அசையா விட்டால் அவர்களுக்கு அறை கொடுத்தாவது எழுப்பியே ஆக வேண்டும்.

விரைந்து பணி செய்வோம! வெற்றி நமதே!

—பொன் மணிமொழி-வாழைக்குறிச்சி.

0: 182: உறுதியுடன் ஒருங்கிணைந்து செயல்படுவோம்

பாவலரே! நற்றமிழின் காவலரே!! தேன்மொழியாம் தெ(ா)ன் மொழியின் கொள்கைதனை விளக்கிடவே, முககழகம் அமைத்து முத்தமிழை வளர்த்திட்ட மதுரை மாநகர்தனிலே மாநாடு கண்டிட்டீர் இரண்டாம் முறையாக! தமிழின் நிலை கண்டீர்! தமிழனின் நிலையும் கண்டீர்!! தமிழ் நாட்டின் நிலைமையினையும் கண்டிட்டீர்!!! நிலைகுலைந்த நாடு, மொழி இனத்தினை பே ஏற்றமுறச் செய்திடவே புத்தம புதியதொரு புரட்சிமிகு காலத் தொடக்கத்தை உலகவாலாற்றல் பொன்னெழுத்துகளால் பொறித்திடவே, ஏற்றமிகு எதிர்கால எழிற் சித்திரத்தை பாவடிவாய்ப் பைந்தமிழில் சித்திரிக்கவிருக்கும் பெருஞ்சித்திரனாரே! கண்ட கனவை நனவாக்க உறுதி பூண்டுவிட்ட புரட்சிப பாவலரே !!

காவடியாய்- சோற்றுக்குக் காவடியாய், தன்மானமிழந்து, கொள்கை துறந்து, தாய்மொழியை மறந்து, நாட்டுப்பற்றற்று, நற்றமிழின் உணர்வற்று, இழி பிறவியாய், தன்மானத் தமிழ்னத்தைக் காட்டிக் கொடுக்கின்ற கருங்காலிக் கூட்டமும்; நாட்டின் பெயராலும், மொழியின் பெயராலும் இனத்தின் பெயரா லும், நாட்டமிகக் கொண்டு நாளும் அயராது உழைக்கின்றேம்; அல்லல் பல ஏற்கின்றேம் என்றும், நாடு, மொழி, இனம் காக்க எதை இழக்கவும் பின்வாங்கோம் என்றும் கூறி நாடகமாடிவரும் ஏமாற்று எழுத்தாளர்களும், புரட்டுப் புரட்சிப் பேச்சாளர்களும், கலையை விலைபேசும் விலைமாதருக்கும் கீழான இழிந்த பிறவிகளும், பாவலர் எனக்கூறி மொழியை பிழைப்பிற்குக் கருவியாக்கிக்கொண்ட சாரமற்ற சோடைகளும், நாட்டை அழித்துவரும் கொடிய அரசியல் பித்தலாட்டக்காரர்களும், ஆரியக் கைக்கூலிகளும், வடநாட்டான் அடிவருடிகளும் , உண்மை அறிந்திடாத ஏதுங்கெட்ட தமிழர்களும் நூற்றுக்கு எழுபத்தைந்து விழுக்காடு நிறைந்துள்ள இந்நாட்டைப் பண்படுத்தும் பணியைத்தான் முதற்படியாய்த் துவக்கியுள்ளோம்! துணை நிற்போம்; தோளொடு தோள் கொடுப்போம்; உயிர் கொடுப் போம் தமிழ் நாட்டின் விடுதலைக்கே என்று வண்ணதிர மார்தட்டிச் சூளுரைத்த மறத் தமிழர்களில் தேறுபவர் ஒருசிலரே என்பதறிந் திட்டோம் நாம் கண்ட மதுரை மாநாடுதனில் !!!

ஆகையினுல், நமது கொள்கைப் புனிதப் போக்கில் இடர்பலவும் உண்டு என்றுணர்ந்திட்ட, நெஞ்சுரமற்ற பண்படாப் பல்லோர்கள் அரவணைப்பும் காட்டவில்லை; அணைத்துக் கொண்டும் பேசவில்லை!! உண்மையை உலகறியச் செய்திடாமல் இருட்டடிப்பும் செய்திட்டார்கள்!! காலம் தான் அவர்களுக்குத் தக்க விடையிறுக்கும்!! ஆதலினுல், துணை இல்லையே, பக்கவலுவில்லையே, இதைத் தொடர்ந் தால் தொல்லையே; என மனந்தளரவோ, ஊக்கமும், உறுதியும் குறையவோ, கொள்கையில் மாற்றமோ, ஏமாற்றமோ கொள்ளத் தேவையில்லை. இப்பொழுது தான் தமிழ்நாட்டுப் பொற்காலத்தின் புதிய வரலாறு துவங்கப் பட்டிருக்கிறது. இனிமேல்தான் நமக்குப் பொறுமையும், பொறுப்பும், கடமையும், கட்டுப்பாடும், உறுதியும், ஊக்கமும் உரிமை வேட்கையும், ஈக உணர்வும், கொள்கையில் அழுத்தமான பிடிப்பும் தேவை ஆக்க வேலைகளில் ஈடுபடுவதற்கான சீரிய திட்டங்கள் நம்மில் ஒவ்வொருவருக்கும் தேவை. எனவே நாம் முன்னிலும் மிகு ஈடுபாட்டுடனும் ஊக்கமுடனும், உறுதியுடனும் ஒருங்கிணைந்து செயல்படுவோம. வெற்றி உறுதி! உறுதி!! "தமிழ் நாடு தமிழருக்கே" என்ற நம்முடைய கொள்கை நோக்கத்திற்கு வெற்றி உறுதி!!!

—பொ. வாசுதேவன்-சென்னை-38.

பற்றிய செய்திகளை, அழகாகவே வெளியிட்டிருக்கிறீர்கள் செய்திகளைத் தக்க முறையில் வெளியிடுவதற்காகத் தங்களைப் பெரிதும் பாராட்டுகிறேன். கோ. நிலவழகன்.
துணைப்பேராசிரியர், பச்சையப்பன் கல்லூரி, சென்னை-30

0: 369: பைந்தமிழ்ப்பாவல! தென்மொழி சுவடி 10 ஓலை 10 இதழ் கண்டேன். "இனியேனும் ஒன்றிணைவீர்!" என்னும் முகப்புப் பாடல் தற்காலத்திற்குத் தேவைப்படும் ஒன்றே. ஊரீசுக் கல்லூரியில் "இக்காலத் தமிழ்மாந்தர்" என்னும் தலைப்பில் தாங்கள் பாடிய பாடலில் ஒவ்வொருவரின் நிலைமையையும் மிகத் தெளிவாகப் பாடியுள்ளீர்கள். "ஆரியப் பார்ப்பனரின் அளவிறந்த கொட்டங்கள்! என்ற தங்களது ஆசிரிய உரைகள் மூன்றும் மிகவும சிறப்பாக அமைந்துள்ளன. தென்மொழி விலை ஏற்றத்தைப் பற்றி அன்பர்கள் கவலுற மாட்டார்கள் என நினைக்கின்றேன். அதற்காகத் தாங்கள் கவலுற வேண்டாம். தென்மொழியைக் காலந்தாழ்த்தாமல் வெளிவர முயற்சி எடுக்கும்படி தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்
—வை. கந்தசாமி-மயிலாடுதுறை

0: 370: பெருமதிப்பிற்குரிய பாவலரேறு அவர்கட்கு வணக்கங்கள் பல. தங்களின் அயராத, உண்மையான தமிழ்ப் பணியை எண்ணி, எண்ணி இறும்பூதெய்துகிறேன். தலை வணங்குகின்றேன். கடந்த 1—6—73 'துக்ளக்' இதழில் 'தமிழில் ஏன் இப்படி எழுதக் கூடாது' என்ற தலைப்பில் அதன் ஆசிரியர் 'சோ' எழுதியிருந்த ஒரு கட்டுரையைப் படித்துக் கலங்கிப் போனேன். ஆரியர்கள் தமிழைக் கெடுக்கத் திட்டமிட்டுப் பணிபுரியும் கொடுமையைக் கண்டு நெஞ்சம் கொதிப்புற்றேன். இவர்களின் திட்டங்களை விளங்கிக் கொள்ளாமல் ஏமாளித்தனமாக அவர்களுக்குத் துணை தந்து கொண்டிருக்கும் தமிழர்களின் எதிர்காலத்தை எண்ணி மிகவும் வருந்தினேன்.

தங்களைப் போலும் தமிழ்க்குமுகாய முன்னோடிகள் இருக்கும் போதே இவ்வளவு கேடு செய்யும் இப்பார்ப்பனக் கூட்டம், தங்களைப் போன்றோரும் இல்லாமற் போயிருந்தால் எவ்வளவு விளைத்திருக்கும் என்பதை எண்ணுங்கால் மெய் நடுங்குகின்றது. தமிழர்கள் இவற்றையெல்லாம் நன்கு உணர்ந்துகொண்டு என்றைக்குத்தான் செயல்படப் போகிறார்களோ? — நினைக்க வெட்கமாயிருக்கிறது. எனினும் தங்கள் பாதையில் தொடர்ந்து செயலாற்றுங்கள். இறுதியில் வெற்றி நம் பக்கமே. —செ. கு. தமிழரசன்,
செட்டிகுப்பம் (குடியேற்றம்.)

0, 371: தங்களின் "இக்காலத்தமிழ்மாந்தர்' என்னும் பாடல்களைப் பன்முறை திரும்பத் திரும்பத் படித்தேன். இக்காலத் தமிழரின் ஏற்றத் தாழ்வுகளையும், சீர்கெட்ட நிலையினையும் நன்கு எடுத்துரைத்து, இதற்கெல்லாம் கரணியத்தையும் அதனை அகற்ற வல்ல சிறந்த கருவியான "பொதுவுடைமை" யினையும் எதிர்நோக்கி, அந்நாளில் பூக்கவிருக்கும் இன்பப் பொலிவினைக் காணக்காத்திருக்கவும் சொல்கின்றீர். அந்த இன்பத்திற்கு அழைத்துச் செல்லத் தமிழ் நாட்டின் சிறந்த தலைவரான தாங்கள் அதற்கான வழியினை மேன் மேலும் தொடர்ந்து எழுதிவருமாறு வேண்டி விரும்பிக் கேட்டுக் கொள்கின்றேன். —தோழன் கூழிபிறை (அ.நி) (திருச்சி)

தென்மொழி

பதிவு எண்: எம்:7211

தமிழக வரலாற்றிலேயே நாட்டு விடுதலை கோரி முதன்முதல் சிறை சென்ற விடுதலை மறவர்கள் :

1. பெருஞ்சித்திரனார்
—கடலூர். (தெ.ஆ)

2. அரசங்குடி சம்பந்தம்
— திருச்சி

3. க. வெ. நெடுஞ்சேரலாதன்
—மதுரை.

4. உ. அரசுமணி
—மதுரை.

5. மறை-நித்தலின்பன்
—கோவை.

6. அறவாழி
—வெங்காலூர்.

7. மகிபை-பாவிசைக்கோ
—வெங்காலூர்

8. ப. முருகவேள்
—மதுரை.

9. மா. ஆடலரசு
—முகவை.

10. ப. அடியார்க்கருளி
—புதுவை.

11. கா. தமிழரசன்
—முதுகுன்றம். (தெ. ஆ)

தமிழகம் இனி இவர்களைப் பின்பற்றியேனும் எழுச்சி பெற்றுத் தன்னுரிமைக்காகப் போராடித் தில்லி யாட்சியினின்று நிலையாக விடுதலை பெறுமாக!

தென்மொழி மின் அச்சகம்.
கடலூர்-1. தமிழகம்.